விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 05 வியாழக்கிழமை (19.05.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 151

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்த போதும்

# போர்க்குற்ற விசாரணை இடம் பெறவில்லை

## ஐ.நா.மீது மன்னிப்புச் சபை குற்றச்சாட்டு

(கொழும்பு)

**வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.**

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் ஈராண்டு நிறைவடையும் நிலையில் சர்வதேச மன்னிப்புச் சபையின் இலங்கை விவகாரங்கள் தொடர்பிலான ஆய்வாளர் யூலண்டா பொஸ்டர் இக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

போர் எவ்வளவு கொடுமையானது என்பதற்கு ஆன்னி பிராங்கின் நாட்குறிப்பில் சில குறிப்புக்களைச் சுட்டிக்காட்டிய அவர் வன்னிப் போரின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியும், நியாயமும் கிடைப்பதற்கு வழிசெய்யப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய (20ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையின் 33–வது பிரதம நீதியரசராக சிராணி பண்டாரநாயக்க நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். உச்ச நீதிமன்றத்தின் சிரேஷ்ட நீதிபதியான இவர், இலங்கையின் பிரதம நீதியரசர் பதவிக்குத் தெரிவாகும் முதல் பெண்மணியாவார்.

# தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு உருத்திரகுமாரன் கடிதம் அனுப்பி வைப்பு

(லண்டன்)

தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் அதிமுக பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவுக்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் செயலகத்தின் கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிப் பீடத்தில் ஏறியிருக்கும் செல்வி ஜெயலலிதா, ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து கூறிய கூற்றுக்கள் பரவலாக பலரது கவனத்தைப் பெற்றிருக்கின்றது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் உருத்திரகுமாரனினால் அனுப்பிவைக்கப்பட்ட இக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மதிப்புக்குரிய தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்களுக்கு,

நடைபெற்று முடிபடைந்த சட்டமன்றத் தேர்தலில் அமோக வெற்றியடைந்து தமிழ் நாட்டின் முதல்வராக, தங்கள் பதவியேற்கும் இத் தருணத்தில் ஈழத் தமிழ் மக்கள் சார்பில் தங்களை வாழ்த்துவதிலும், பாராட்டுவதிலும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் பெருமகிழ்வடைகிறது.

ஈழத் தமிழர் தேசம் தமது தாயகத்தைப் பாதுகாத்துக்கொள்ளவும் கௌரவமான வாழ்வை மீட்டெடுத்துக் கொள்ளவும் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும், கொடுமைகளுக்கும் நீதி கோரவும், சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களை எதிர்த்து ஜனநாயக வழியில் அரசியல் இராஜதந்திர (20ஆம் பக்கம் பார்க்க)

## முதலமைச்சரின் வீட்டில் சோதனை

# த.ம.வி.பு. உயர்மட்டக் குழு இன்று ஜனாதிபதியுடன் பேச்சு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் உயர்மட்டக் குழுவினர் இன்று வியாழக்கிழமை காலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

முன்னறிவித்தல் இன்றி கட்சியின் மாகாணசபை உறுப்பினர் ஒருவரைக் கைதுசெய்தமை தொடர்பிலும் முதலமைச்சரின் வீட்டில் இராணுவத்தின் திடீர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டமையால் கட்சிக்கு ஏற்பட்டுள்ள இழுக்கு தொடர்பாக கலந்துரையாடும் வகையிலேயே இந்தச் சந்திப்பு ஏற்பாடாகியுள்ளது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் சார்பில் மட்டக்களப்பில் நேற்றுப் புதன்கிழமை மாலை நடத்தப்பட்ட விஷேட செய்தியாளர் மாநாட்டின்போதே இது தொடர்பில் அறிவிக்கப்பட்டது.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில், கட்சியின் பிரதித்தலைவரும் மாகாணசபை உறுப்பினருமான நா.திரவியம் (ஜெயம்), செயலாளர்நாயகம் (20ஆம் பக்கம் பார்க்க)

# அரசுக்கு முழு ஒத்துழைப்பு; தமிழ்க் கூட்டமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசு இந்தியாவுக்கு வழங்கிய உறுதிமொழியின் அடிப்படையில் இனப் பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வின் மூலம் முறையான தீர்வு ஒன்றை முன்வைக்கும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கும் என்று இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

இவர் இந்தியாவிடம் வழங்கிய உறுதிமொழிகள் குறித்து தற்போது எதுவும் கூற இயலாது. அது குறித்து நாம் திருப்தியடையவும் முடியாது.

எனினும் நாட்டில் சமாதானம் ஏற்படவும், தமிழ்– சிங்கள மக்களிடையே நல்லிணக்கம் ஏற்படவும் இது ஒரு சந்தர்ப்பமாக அமையும். அமைச்சர் பீரிஸ், இந்தியத் தலைவரிடம் உறுதியளித்த விடயங்கள் நடைமுறைக்கு வரவேண்டும். அப்போதுதான் அது குறித்து நாம் கருத்துத் தெரிவிக்க முடியும். திருப்தியடையவும் முடியும்.

அமைச்சர் பீரிஸ் தனது விஜயத்தை முடித்துக்கொண்டு இலங்கை திரும்பியவுடன் இந்தியத் (20ஆம் பக்கம் பார்க்க)

**நாளை...**

**கொழும்பின் பிரபல்ய ஆசிரியர் ரி.திலிப்குமாரின் தரம் 5 புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்**

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# வவுனியாவில் நினைவஞ்சலி நிகழ்வு

(வவுனியா)

முள்ளிவாய்க்காலில் மரணித்த உறவுகளுக்கான 2ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வு வவுனியா நகரசபை மண்டபத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் அனுஷ்டிக்கப்பட்டது.

வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான என்.சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம் மற்றும் வவுனியா நகரசபை உறுப்பினர்கள், வன்னிப்பிரதேச பிரதேச சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பல தரப்பினரும் இதில் கலந்து கொண்டு தீபமேந்தி மலரஞ்சலி மற்றும் மௌன அஞ்சலி செலுத்தினர். (ச-5)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290

# அல் கெய்தா புதிய தலைவராக எகிப்து மாஜி பொலிஸ் தேர்வு!

(இஸ்லாமபாத்)

அல் கெய்தா பயங்கரவாத இயக்கத்தின் தற்காலிக தலைவராக எகிப்து நாட்டு முன்னாள் சிறப்பு படை அதிகாரி சைபல் ஆதல் தேர்வு செய்யப்பட்டுள்ளார். மாஜி பொலிஸ் அதிகாரி பயங்கரவாத கும்பலுக்கு தலைவராகி இருப்பது சலசலப்பை ஏற்படுத் தியுள்ளது.

பாகிஸ்தானின் அபோதாபாத் மாளிகையில் பதுங்கியிருந்த அல் கெய்தா தலைவர் ஒசாமா பின்லேடன் அமெரிக்கா படைகளின் அதிரடி வேட்டையால் கடந்த 2ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டார். இதனையடுத்து சைபல் ஆதல் தற்காலிக தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

**அல் ஜவாஹிரிக்கு கல்தா?**

அல் கெய்தாவின் அடுத்த தலைவராக அல் ஜவாஹிரிதான் தேர்வு செய்யப்படுவார் என பரவலாக பேசப்பட்டது. இந்நிலையில் சைபல் தற்காலிகமாக தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஒசாமா பலியான பிறகு துபாயில் இருந்து வெளியாகிய பத்திரிகை ஒன்றில் ஒசாமா மறைவிடம் குறித்து அமெரிக்காவுக்கு அல் ஜவாஹிரி தகவல் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் ஒசாமா அல் ஜவாஹிரி இடையே யார் தலைவராக இருப்பது என்பது தொடர்பாக போட்டி நிலவியதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அல் ஜவாஹிரிக்கு பதிலாக சைபல் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (ச-5)

# அகமகிழ பாராட்டுகின்றோம்

## திருமதி றூபா உதயரட்ணம்



**(உதவிக் கல்விப்பணிப்பாளர் வலிகாமம் கல்வி வலயம்)**

கல்வியே கண்ணெனவும்
கண் இமையே பண்பெனவும்
கண்மணியே இலக்கு எனவும்

ஆரம்பநாள் முதல் ஆரம்பக் கல்வியிலே தனக்கென ஓர் தனி இடம் பிடித்த திருமதி றூபா உதயரட்ணம் அவர்களை மேலும் பல உயர்வுகள்பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வெற்றி இலக்கு
(ஆசிரியர் குழாம்)

தயா அச்சகம். (சி-3251)

# மாணவியின் சடலம் மீட்பு

(கரவெட்டி)

வடமராட்சி பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் மாணவியொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இவரின் மரணத்தில் மர்மம் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சடலம் நேற்று காலை வடமராட்சி கொலிச் வீதியிலுள்ள அவரது வீட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்ட மாணவி வடமராட்சிப் பகுதியிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் கணக்கியல் பிரிவில் கல்வி பயிலும் துரைராஜா நிதர்ஷனா (வயது-18) என தெரிவிக்கப்படுகிறது.

வீட்டில் தூக்கில் தொங்கியிருந்த சடலத்தை பருத்தித்துறை பொலிஸார் மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்தனர்.

சடலம் உறவினர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் இன்று மரண விசாரணைகள் இடம்பெறவுள்ளது. (எ-5,6,24)

# பொதுநலவாய போட்டிகளை நடத்த இலங்கைக்கு தகைமை

2018இல் பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டியை அம்பாந்தோட்டையில் நடத்தும் நம்பிக்கையுடன் உள்ள இலங்கை ஒலிம்பிக் குழு, இந்த விளையாட்டுப் போட்டியை நடத்தும் தகைமை இலங்கைக்கு இல்லையென சில தரப்பினர் கூறியுள்ளதை வன்மையாக மறுத்துள்ளது.

இந்த பொதுநலவாய போட்டிகளை நடத்துவதற்கு பாரிய நிதிதேவை என்பது எமக்குத் தெரியும். ஆனால் வெளிநாட்டு முதலீட்டாளர்களும் 50தனியார்துறை நிறுவனங்களும் இதை நிதிப்படுத்துவர் என குழுவின் பிரதான நிர்வாக அதிகாரி நளின் ஆட்டிகல கூறினார்.

சண்டை நடந்த காலத்தில் பாதுகாப்புக்காக ஆண்டுதோறும் பல மில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டது. இந்தப் பணத்தையும் நாட்டின் மதிப்பை உயர்த்தக்கூடிய பல இந்த திட்டத்திற்கு பயன்படுத்தலாம் என ஆட்டிகல கூறினார். (ச-5)

# சிறைச்சாலையில் இரத்ததான நிகழ்வு

2600 சம்புத்தத்வ ஜயந்தியை முன்னிட்டு நேற்று யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஏற்பட்ட இரத்த வகைக்கான தட்டுப்பாட்டினை போக்கும் வகையிலேயே இந்த இரத்தானம் வழங்கப்பட்டுள்ளது. இதில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உட்பட 25 பேர் இரத்ததானம் வழங்கினர்.

இந்த இரத்தான நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா, யாழ்ப்பாண சிறைச்சாலை உதவி மேற்பார்வையாளர் சந்தன ஏகநாயக்க, சிறைச்சாலை நலன்புரிச்சங்கத் தலைவர் எஸ்.சுசிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-6)

**ஆனந்தி திருமண சேவை**

**மணமகன் தேவை**

1979ல் பிறந்த பூரட்டாதி, பாவம் 98, உதயச் செவ்வாய், ஆசிரியையாக பணியாற்றுபவருக்கு உள்ளூர் மணமகனை விரும்புகின்றோம். தொலைபேசி (0212228708) தபால், நேரடியாக தொடர்பு கொள்க,
V.A.சிவராசா சோதிடர், 56, அம்மன் றோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம். (4967)

**வெற்றித் துளிர்-4**

தரம் 1 முதல் 5 வரை வெளி வந்து விட்டது. கல்வி நிறுவனங்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
**சிவ சன்**
362, கே.கே.எஸ். றோட்,
மனோகரா தியேட்டர் முன்பாக, யாழ்ப்பாணம்.
T.P: 0773717353 (4969)

**சேல்ஸ் கேல்ஸ் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் ஜவுளி நிறுவனத்துக்கு புடைவை வியாபாரத்தில் அனுபவம் உள்ள ஆண், பெண் ஊழியர்கள் தேவை.
தொடர்பு: 0772850753 (4968)

# மரண அறிவித்தல்

## செல்வி கனகசபை துஷாந்தி (B.A)



42/7 ஈச்சமோட்டை கடற்கரை வீதியைச் சேர்ந்த செல்வி கனகசபை துஷாந்தி 17/05/2011 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா கனகசபை (றீகல் வீடியோ அன் சவுண்ட்ஸ்-ஈச்சமோட்டை)-பங்கஜா தம்பதியினரின் ஆசை மகளும், பிரசாந்தன் (தம்பி), சுசி, துஷியந்தன் (லண்டன்), யசோதினி (தங்கா-லண்டன்), ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுனில் ரஞ்சித், ஷசிலா (லண்டன்), நவநீதராஜா (நவம்-லண்டன்) ஆகியோரின் ஆசை மைத்துனியும், காலஞ்சென்ற நடராஜா மற்றும் தையல்நாயகி, காலஞ்சென்றவர்களான கனகசபை-தங்கமா தம்பதியினரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள், 42/7 ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11.00மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 1.00மணியளவில் கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

42/7, ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்

(4966)

# மரண அறிவித்தல்

## வைரவிப்பிள்ளை சின்னத்தம்பி

**(ஓய்வு பெற்ற அதிபர்)**



கரணவாய் தெற்கு அண்ணா சிலையடியை பிறப்பிடமாகவும் எம்.எஸ்.வீதி கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட வைரவிப்பிள்ளை சின்னத்தம்பி 18/05/2011 நேற்று (புதன்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவிப்பிள்ளை, சின்னம்மாவின் மகனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் கணவரும், தனேஸ்வரதேவி, இரத்தினேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், முத்துராசாவின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

எம்.எஸ்.வீதி,
கோண்டாவில் கிழக்கு,

தகவல்
குடும்பத்தினர்

(சி-3250)

# இன்று ஒரு தகவல்

## அரசருக்கு இருக்க வேண்டிய தகுதி

சீன தேசத்தில் ஒரு அரசர் இருந்தார். அவருக்கு வயதாகி விட்டது. அவருக்கு அடுத்தபடியாக அவரது மகன் பட்டத்துக்கு வர வேண்டும். ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஒரு நல்ல தலைவனுக்கு இருக்க வேண்டிய பண்புகளெல்லாம் தன்னுடைய மகனுக்கும் இருக்க வேண்டுமென அந்த அரசர் விரும்பினார்.அதனால் அவர் தன் மகனான இளவரசனை பக்கத்தில் இருந்த குரு ஒருவரிடம் அனுப்பினார்.

இளவரசர் குருவிடம் போய்ச் சேர்ந்தார். அந்த குரு இவனைப் பார்த்துச் சொன்னார்.

"இதோ பார்... நீ ஒரு வேலை செய்ய வேண்டும்... இப்போதே அருகில் இருக்கும் காட்டுக்குப் போ. நடுக்காட்டில் போய் ஓர் இடத்தில் உட்கார்ந்து கொள். அங்கே என்னென்ன சப்தமெல்லாம் உன் காதில் விழுகிறது என்று கவனித்துக் கேள். பிறகு உன் காதில் விழுந்த ஓசைகள் என்னென்ன என்பதை என்னிடம் வந்து சொல். அதுதான் உனக்கு வேலை" என்று சொல்லி அனுப்பினார்.

இளவரசர் காட்டிற்குச் சென்றார். குரு சொன்னபடியே ஓர் இடத்தில் உட்கார்ந்து காதில் விழும் ஓசைகளை கவனித்துக் கேட்டான். அதன் பின்னர் குருவிடம் திரும்பி வந்தான். "என்னென்ன சப்தங்களைக் கேட்டாய்?" என்று குரு வினவினார்.

"குருவே! காட்டில் நான் பறவைகளின் சப்தமெல்லாம் கேட்டேன். மிருகங்களின் ஓசைகளையும் கேட்டேன். இவை தவிர இடி-மின்னல்-மழை ஆகியவற்றின் சப்தங்களை கேட்டேன்" என்று தெரிவித்தான்.

குரு யோசித்தார்: "நீ இன்னும் சரியாகக் கேட்கவில்லை...! அதனால் மீண்டும் காட்டுக்குப் போ... கொஞ்ச நாள் அங்கேயிருந்து நீ கேட்கும் சப்தங்களை கேட்டு வந்து எனக்குச் சொல்" என்றார்.

இளவரசனுக்கு ஒன்றும் புரியவில்லை! இருந்தாலும் குருநாதரின் கட்டளையாயிற்றே! மறுக்க முடியுமா? உடனே அவன் மறுபடியும் காட்டுக்குச் சென்றான். ஓர் இடத்தில் உட்கார்ந்திருந்தான். முன்பைவிடச் சற்று உன்னிப்பாக கவனித்துக் கேட்டான். சில நாட்கள் கழிந்ததும் குருவிடம் திரும்பி வந்தான்.

"குருவே இந்தத் தடவை சில துல்லியமான சப்தங்களை கேட்டேன். தேனீ பறக்கும் சப்தம்... நீரோடையின் மெல்லிய ஓசை... இதெல்லாம் கேட்டேன்" என்றார். குருவின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

அவர் புன்சிரிப்புடன் "நீ திரும்பவும் காட்டுக்குப் போ... இன்னும் சில நாட்கள் அங்கேயே இரு... சப்தங்களையெல்லாம் முழுமையாகக் கவனமாகக் கவனித்துக் கேட்டுக் கொண்டு வா!" என்று கூறி சீடனை அனுப்பி வைத்தார்.

இளவரசனுக்கு குழப்பம் அதிகமாயிற்று! அவனுக்கு எதுவும் புரியவில்லை.

மறுபடியும் அவன் காட்டுக்குப் போனான். இப்போது மௌனமாக ஓர் இடத்திலேயே ஆடாமல் அசையாமல் உட்கார்ந்தான். அப்படியே தியானத்தில் ஆழ்ந்து விட்டான். அந்த நிலையில் சில நாட்களில் அவனுக்கு இதுவரையில் கேட்காத ஒலிகளெல்லாம் கேட்க ஆரம்பித்தன. இதைத்தான் நான் கேட்க வேண்டும் என்று என்னுடைய குரு எதிர்பார்த்திருக்கிறார் என்பதை அவன் புரிந்து கொண்டான்.

உடனே குரு இருந்த இடத்துக்கு ஓடினான். "குருதேவா! இந்தத் தடவை சாதாரணமாகக் காதுகளுக்கு கேட்க முடியாத சில ஓசைகளையும் கூட என்னால் உணர முடிந்தது! பூக்கள் மலரும் ஓசை, சூரியனால் பூமிசூடாகும் போது எழும் ஓசை, காலைப் பனித்துளியை புல்லினங்கள் குடிக்கும் ஓசை இதையெல்லாம் என்னால் நன்றாகக் கேட்க முடிந்தது" என்றான்.

குருவுக்கு இப்போதுதான் திருப்திப்பட்டது. அவர் இளவரசனைப் பார்த்து சொன்னார்: இதோ பாரப்பா... இப்போதுதான் உனக்கு நாட்டை ஆளக் கூடிய தகுதி வந்திருக்கிறது! என்று சொல்லி அதற்கு விளக்கமும் கொடுத்தார். "எந்த அரசர் தன்னுடைய நாட்டு மக்களின் இதயம் பேசுகிற மௌன மொழியை - மௌன வார்த்தைகளைக் கேட்கிறானோ- அவன்தான் நாடாள்வதற்கு உரிய தகுதி வாய்ந்தவன். எந்த அரசன் பொதுமக்களின் உணர்ச்சிகளை உண்மையில் உணர்ந்து கொள்கிறானோ அவன்தான் முதன்மையானான அரசன்! போலி வார்த்தைகளை மட்டும் கேட்டு விட்டு பல மௌனராகங்களைக் காதில் வாங்கிக் கொள்ளாதவன்- மக்களை மதிக்காதவன் அரசனே இல்லை! எந்த நாட்டில் எப்போது ஓர் அரசன் தன்னுடைய மக்களின் உணர்ச்சிகளைக் கேட்க மறுக்கிறானோ... அன்றையிலிருந்து அந்த நாடு அழியத் தொடங்குகிறது என்பது பொருள்!"- இதுதான் அந்த குரு இளவரசருக்கு வழங்கிய அறிவுரை.

வாயால் பேசுவதை மட்டும் கேட்டு ஏமாந்து போய்விடக் கூடாது. மற்றவர்களின் உணர்ச்சிகளையும் கேட்டால்தான் சரியான மனப்பக்குவம் ஏற்படும்.மக்களின் உணர்ச்சிகளை சரியாகப் புரிந்து கொள்ளாத- மதிக்காத - அரசர்கள் ஆட்சி பீடத்தில் நீடித்திருக்க முடியாது. அதுபோன்ற நாடுகளில் அடிக்கடி குழப்பம்தான் உண்டாகும். அடிக்கடி ஆட்சி மாறிக் கொண்டிருக்கும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தேசிய போஷாக்கு மாதத்தையொட்டிய கட்டுரை, சுவரொட்டி போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சுகாதார அமைச்சு 2011 ஜுன் மாதத்தை **அனைவருக்கும் சிறந்த போஷாக்கு - உங்கள் பொறுப்புக்களை நிறைவேற்றுங்கள்** என்ற தொனிப்பொருளில் போஷாக்கு மாதமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

எனவே, கல்வியமைச்சு மாணவர்களின் அறிவு மற்றும் திறமைகளை விருத்தி செய்வதற்காக போட்டிகளை நடாத்த ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய பாடசாலை மாணவர்களுக்கிடையில் கட்டுரை, சுவரொட்டிப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன. கட்டுரை மற்றும் சுவரொட்டி போட்டிகள் இரு பிரிவுகளாக நடாத்தப்படவுள்ளன.

இதில் கனிஷ்ட பிரிவில் தரம் 6 தொடக்கம் 10 வரையான மாணவர்களும் சிரேஷ்ட பிரிவில் தரம் 10 தொடக்கம் 13 வரையான மாணவர்களும் பங்கேற்கலாம். கட்டுரையானது, **எமது போஷாக்கை நாமே பாதுகாப்போம்** என்ற தலைப்பில் எழுதப்படல் வேண்டும்.

இதில் கனிஷ்ட பிரிவில் கல்வி கற்கும் மாணவர்கள் 500 தொடக்கம் 750 சொற்களுக்கு குறையாமலும் சிரேஷ்ட பிரிவில் கல்வி கற்கும் மாணவர்கள் 750 தொடக்கம் 1000 சொற்களுக்குக் குறையாமலும் கட்டுரை வரைதல் வேண்டும். சுவரொட்டிப் போட்டியானது, **எமது போஷாக்கை நாமே பாதுகாப்போம்** என்ற தலைப்பில் அமைதல் வேண்டும்.

சுவரொட்டிகள் யாவும் 18×14 அளவுகளில் இருக்கவேண்டும்.அத்துடன் சித்திரம் வரைவதற்கு வெள்ளைநிற பிறிஸ்டல் அட்டை பயன்படுத்த வேண்டும். சித்திரத்தைச் சுற்றி ஓரம் ஒன்றை மீதம் வைப்பதும் மவுண்ட் செய்வதும் தவிர்க்கப்படல் வேண்டும்.

அத்துடன் ஏற்பாட்டுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற அங்கீகரிக்கப்பட்ட நடுவர் குழுவொன்று மூலம் அனைத்து ஆக்கங்களும் பரிசீலிக்கப்பட்டு நடுவர்குழுவின் தீர்மானத்திற்கமைவாகவே இறுதி முடிவு எடுக்கப்படும்.

அனைத்து ஆக்கங்களும் நாளை வெள்ளிக் கிழமைக்கு முன்னர் ரேணுகா பீரிஸ், கல்விப்பணிப்பாளர் பாடசாலை சுகாதார மற்றும் போஷாக்குக்கிளை கல்வி அமைச்சு, இசுரு பாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்குஅனுப்பவேண்டும். ஸ்ரீ-2)

# நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கல்வியியற் கல்லூரிகளில் இவ்வாண்டுக்கான கற்கை நெறிகளை பூர்த்தி செய்த ஆசிரிய மாணவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 10 மணிக்கு அலரிமாளிகையில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். என். குணசேகர தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# விண்ணப்ப முடிவுத்திகதி நீடிப்பு

(சாவகச்சேரி)

தேசிய கலை இலக்கியப் போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 21 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே, கலந்து கொள்ளவிரும்பும் தென்மராட்சி பிரதேச மாணவர்களும் ஏனையோரும் தென்மராட்சி பிரதேச செயலக கலாசார பிரிவினருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்குமாறு பிரதேசசெயலாளர் திருமதி அ. சாந்தசீலன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-29)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 60-70 | 80 | 100 |
| தக்காளி | 80 | 90 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40-45 | 70 | 70 |
| கோவா | 70 | 80 | 60 |
| கரட் | 70 | 100 | 90 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 30-40 | 80 | 50 |
| வாழைக்காய் | 20 | 40 | 30 |
| சின்ன வெங்காயம் | 160 | 130 | 150 |
| பெரிய வெங்காயம் | 45 | 50 | 60 |
| பாகற்காய் | 70 | 120 | 140 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | - | 90 | 80 |
| பயற்றங்காய் | 40-50 | 60 | 60 |
| லீக்ஸ் | 70 | 80 | 70 |
| பீற்றூட் | - | 70 | 80 |
| கறிமிளகாய் | 90 | 100 | 110 |
| முருங்கைக்காய் | 250 | 350 | 400 |
| போஞ்சி | - | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | - | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 15 | 30 | 30 |
| தேசிக்காய் | 140 | 130 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 30-55 | `50 | 60 |

# இராசி பலன்

19.05.2011

(வைகாசி 05 ,வியாழக்கிழமை)

சூரியஉதயம் காலை 5.54 மணிக்கு

துதியை பிற்பகல் 2.30மணிவரை

கேட்டை மாலை 5.59 மணிவரை

இராகு காலம் 1.22-2.52 மணிவரை

சுபநேரம் 7.22-8.52 மணிவரை

**மேடம்** குடும்பச்சுமை கூடும், மனப் பதற்றங்கள் ஏற்படலாம். பிரயாணத்தில் கவனம் தேவை, உடல் நலனில் கூடிய அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**இடபம்** மகிழ்ச்சியான செய்திகள் வந்து சேரலாம், எடுத்தகாரியம் கைகூடும், உறவினர் வருகையுண்டு, தொழிலில் முன்னேற்றம் ஏற்படும்.

**மிதுனம்** கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த நன்மையுண்டு, ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் முன்னேற்றம் காண்பீர்கள், முயற்சிகள் கைகூடும்.

**கடகம்** கல்வி முன்னேற்றம் கருதி ஒரு தொகையை செலவிடும் சூழ்நிலை அமையலாம், அடிப்படை வசதிகளை பெருக்கிக் கொள்ளும் எண்ணம் தோன்றும்.

**சிங்கம்** வாகன சுகத்தால் வளம் காணும் நாள், தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**கன்னி** சுயமுயற்சியின் மூலம் முன்னேற்றம் காண்பீர்கள், வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், சகோதர ஒற்றுமை பலப்படும்.

**துலாம்** பொறுமையுடன் செயற்பட்டு காரியம் சாதிப்பீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம்.

**விருச்சிகம்** கற்பனைகள் அதிகரிக்கும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு** பக்குவமாக பேசி காரியங்களைச் சாதிப்பீர்கள், குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் கூடும், பயணங்களால் சிறு அலைச்சல் ஏற்பட்டாலும் சிறு ஆதாயம் கிடைக்கலாம்.

**மகரம்** செய்யும் தொழிலில் உயர்வு ஏற்படும், வருமானம் திருப்தி தரும் நாள், பெருமைகள் வந்து சேரும் நாள், மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** நல்லவர்களின் அறிவுரையும் ஆதாரவும் கிடைக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழில் மேன்மையுண்டு.

**மீனம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபடவேண்டிய நாள், தடைப்பட்ட காரியங்கள் நிறைவேறும், வரவேண்டிய வரவுகள் வந்து சேரும்.

வளவன்

# தமிழ் மக்கள் இன்னமும் பயங்கரவாதிகள் போன்று நடத்தப்படுகின்றனர்!

போர் முடிபுற்று இரு ஆண்டுகள் கழிந்த பின்னரும் தமிழ் மக்கள் தற்போதும் சந்தேகக் கண்ணோடு நோக்கப்படுவதும், பயங்கரவாதிகள் போன்று நடத்தப்படுவதும் நீடித்து வருவதாக க்ரைவ்ன்ட் வியூ எனும் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இந் நிலை மாறி தமிழ் மக்களும் கௌரவமாக நடத்தப்பட்டாலேயே இலங்கையில் உண்மையானதும் நிலையானதுமான தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என இந்த இணையத்தளம் வலியுறுத்தியுள்ளது. இவ் விடயம் குறித்து இந்த இணையத்தளம் தெரிவித்துள்ள முக்கிய பகுதிகள் வருமாறு,

தென்னாபிரிக்காவில் உருவாக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழு போல் இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழு செயற்படும் என பலர் எதிர்பார்த்தார்கள். ஆனால் பல்வேறு காரணங்களால் அது நடை பெறவில்லை.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிப்பவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படாத காரணத்தினால் பலர் சாட்சியமளிக்க முன்வரவில்லை. போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக் கூறாமல் நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது.

போரின் போது காணாமற் போன தமது அன்புக்குரிய உறவுகளுக்கு என்ன நடந்தது என எல்லோரும் கேட்கின்றார்கள். கடந்த காலத்தை மறந்து விட்டு எதிர்காலம் குறித்து சிந்தியுங்கள் என அவர்களிடம் கூறுவதில் எத்தகைய பயனும் இல்லை. தமது அன்புக்குரிய உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மை அவர்களுக்கு தெரிந்தாக வேண்டும்.

## க்ரைவ்ன்ட் வியூ இணையத் தளத்தில் வெளியான செய்தி இங்கு தொகுத்து தரப்படுகிறது

அதனைவிடுத்து உயிரிழப்புக்களையும் காணாமற்போனவர்களையும் மறந்துவிட்டு இந் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான எமது திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள் எனக் கேட்பது எவ்வகையிலும் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது.

ஒரு மனிதன் கூடக் கொல்லப்படாமல் உலகில் எங்கும் போர் வெற்றி கொள்ளப்படவில்லை. இது சர்வதேச சமூகத்திற்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் நன்றாகத் தெரியும்.

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு எதிராக இலங்கை அரசாங்கம் ஏன் இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்கின்றது. மேதின ஊர்வலத்தில் பான் கீ மூனுக்கு எதிராக ஏன் இவ்வளவு கோசங்கள் எழுப்பப்பட்டது. நாட்டைக்காப்பாற்றிய படையினருக்காக தான் மின்சாரக் கதிரையில் ஏறவும் தயாராகவிருப்பதாகவும் மகிந்த ராஜபக்ஷ ஏன் கூறவேண்டும்?

15 சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள் வதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் 2006ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவிற்கு என்ன நடந்தது? இந்த விசாரணைக்குழுவால் ஏன் பூரண விசாரணைகளை முன்னெடுக்க முடியாமல் போனது?

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை செய்வதற்கு சர்வதேச பொறிமுறை அமைக்கப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஆனால் இலங்கை அரசாங்கம் எவ்வித குற்றச்செயல்களையும் செய்யாது விட்டால் உண்மைகளை உலகிற்கு கூற ஏன் தயங்கவேண்டும்?

போர்க்குற்றம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் உண்மையான காத்திரமான விசாரணைகளை மேற்கொண்டிருந்தால், இத்தகைய சர்வதேச நெருக்கடி ஏற்பட்டிருக்குமா? உண்மைகளை மனம்விட்டு பேசுவதன் மூலமே இத்தகைய குற்றச் சாட்டுக்களிலிருந்து தப்பமுடியும்.

போர் முடிபுற்றதாயின் வடக்கும் கிழக்கும் ஏன் இராணுவமயப்படுத்த வேண்டும்? பௌத்த மதத்தினர் இல்லாத பூமியில் ஏன் பௌத்த விகாரைகள் நிர்மாணிக்கப்பட வேண்டும்? விடுதலைப் புலிகளின் நினைவுச்சின்னங்களும் மாவீரர் துயிலும் இல்லங்களும் ஏன் அழிக்கப்படவேண்டும்? அரசியல் கைதிகளின் விபரங்களை வெளியிடுவதை என்ன தடையிருக்கிறது?

அமெரிக்கா, இந்தியா மற்றும் மேற்கத்தைய நாடுகள் உதவியுடன் தமிழீழ விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்டு இரு வருடங்கள் கழிகின்ற நிலையில், இப்போது தேவை உண்மையான தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கான காத்திரமான நடவடிக்கைகளே என இந்த இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)

# விடுதலைப்புலிகளுக்கு நிதிவழங்கும்படி நெதர்லாந்து மக்கள் கோரப்பட்டனர்

## அந்நாட்டு நீதிமன்றம் தகவல்

(ஒஸ்லோ)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நிதியுதவிகளை வழங்கும்படி நெதர்லாந்து வாழ் தமிழ் மக்களிடம் நிர்ப்பந்திக்கப்பட்டு வந்ததாக அந்நாட்டு நீதிமன்றத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு நெதர்லாந்து வானொலியின் இணையத்தளம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு கடந்து இரண்டு வருடங்களாக நடைபெற்று வருவதுடன் தமிழீழ விடுதலைப்புலிகளின் நெதர்லாந்துக் கிளையின் தலைவர் மற்றும் பல விடுதலைப் புலிகளின் செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளதாக இவ் ஊடகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் தாம் செய்த பிழைகளை மறுத்தால் அவர்களுக்கு ஆகக் கூடிய தண்டனைகள் வழங்கப்படும் என நீதிமன்றத்தால் அச்சுறுத்தப்பட்டதாக நெதர்லாந்து ஊடகங்களின் செய்திகள் தெரிவிக்கின்றன.

நெதர்லாந்தில் வாழும் தமிழர்களிடம் தமிழீழ விடுதலைப்புலிகளின் நெதர்லாந்துக் கிளை திட்டமிட்ட வகையில் பலவந்தமாக நிதி வசூலிக்கின்றது. இவ்வாறு நிதி வசூலிக்கப்படும் போது பணங்கொடுக்க மறுப்பவர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர் என இவ் ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் போர் முடிபடைந்த போதிலும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கான நிதி சேகரிப்பு நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருவதாக நெதர்லாந்தின் நீதிமன்றத் தரப்பு தெரிவித்துள்ளது.

நெதர்லாந்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். போர் காரணமாக 1980 ஆம் ஆண்டுகளின் நடுப் பகுதிகளிலேயே அதிகமானவர்கள் நெதர்லாந்துக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நிதி சேகரித்தமை மற்றும் அவர்களுடனான நெருங்கிய தொடர்பு காரணமாக பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, பிரித்தானியா, கனடா மற்றும் அமெரிக்காவிலும் பலர் கைது செய்யப்பட்டிருந்தனர். (எ-1)

# ஐ.நா. சபை முன்றலில் துக்கநாள் அனுஷ்டிப்பு

(ஜெனீவா)

முள்ளிவாய்க்கால் தேசிய துக்கநாள் நிகழ்வுகள் ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை முன்றலில் ஈகச்சுடர் ஏற்றலுடன் ஆரம்பமானது.

நாடுகடந்த தமிழீழ அரசின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலன் சிவபாலன், நடராசா ராஜேந்திரா நாடுகடந்த தமிழீழ அரசின் மதியுரைக்குழு உறுப்பினர் பீற்றர் சார்ல்ஸ் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அதனைத்தொடர்ந்து நாடுகடந்த தமிழீழ அரசு பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் சுடர் ஏற்றி மலர் அஞ்சலி செலுத்தினர்.

இதற்கு முன்னதாக நாடுகடந்த தமிழீழ அரசினால் ஐக்கியநாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்று மனித உரிமை ஆணையாளர் நாயகத்தின் பிரதிநிதியிடம் கையளிக்கப்பட்டது.

நாடு கடந்த தமிழீழ அரசின் சார்பில் உள்துறை அமைச்சர் நாகலிங்கம் பாலச்சந்திரன், சுவிஸ் பிரதிநிதி செல்வி சிறி சாஜிதா சிவராசா, துணை நிதி அமைச்சர் நடராசா இராஜேந்திரா, தம்பிப்பிள்ளை நமசிவாயம் ஆகியோர் இந்த மகஜரை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தில் கையளித்தனர்.

இதனைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபை முன்றலில் தியாகி முருகதாஸ் அரங்கில் இந்த நிகழ்வுகள் ஆரம்பமாகின.

சுவிட்சர்லாந்தின் பல்வேறு மாநிலங்களிலிருந்து மட்டுமல்லாது ஐரோப்பிய நாடுகளான பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி உட்பட பல நாடுகளிலிருந்தும் வருகைதந்திருந்த தமிழ் மக்கள் கலந்து கொண்டனர். (ச-5)

# ஜோர்தானிலிருந்து 50 இலங்கையர் திரும்பினர்

(கொழும்பு)

திருப்திகரமான சம்பள உயர்வின்மை மற்றும் சில பிரச்சினைகள் காரணமாக ஜோர்தானிலிருந்து 50இற்கும் மேற்பட்ட இலங்கை ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் நாடு திரும்பியுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் நேற்று அறிவித்தது.

சம்பள உயர்வு கோரி இவர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தப் போராட்டம், வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பின் அமைச்சின் இரு அதிகாரிகள் யோர்தான் சென்று கலந்துரையாடியபின் கைவிடப்பட்டதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தலைவர் கிங்ஸ்லி ரணவக தெரிவித்தார்.

எனினும் இவர்கள் சம்பள அதிகரிப்புக் குறித்து திருப்தியடையாததாலும் ஜோர்தானில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கிடையிலான கடுமையான நிலைவரம் காரணமாகவும் நாடு திரும்புவதாக அவர் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் எவ்வித நடவடிக்கையும் உடனடியாக எடுக்காது என அவர் குறிப்பிட்டார். (எ-1)

# இலஞ்ச ஊழல் முறைப்பாடுகள் மீதான விசாரணைகள் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பாக கிடைக்கப் பெறுகின்ற முறைப்பாடுகள் மீதான விசாரணைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

முறைப்பாடுகளை எழுத்து மூலமாகவோ அல்லது வாய் மொழிமூலமாகவோ ஆணைக் குழுவிடம் தெரிவிக்க முடியும் என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணையாளரான முன் னாள் பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்ர மரத்ன குறிப்பிட்டார்.

ஆணைக் குழு உறுப்பினர்களின் சேவைக் காலம் பூர்த்தியடைந்தமையினால் கடந்த காலங்களில் இலஞ்ச ஊழல் விசாரணைகள் ஸ்தம்பிதமடைந்து காணப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து ஜனாதிபதியினால் ஆணைக்குழுவிற்கு புதிதாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் கடந்த 16 ஆம் திகதி தமது கடமைகளை ஆரம்பித்தனர். இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் புதிய தலைவராக முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் ஜகத் பாலபட்ட பெத்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி வோல்டர் விமலசந்திர மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்கிமரத்ன ஆகியோர் ஆணைக்குவின் ஏனைய உறுப் பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# தங்காலை மீனவர்கள் 5 பேரைக் காணவில்லை

(கொழும்பு)

அம்பாந்தோட்டை தங்காலை கடற்பரப்பில் மீன்பிடிக்கச் சென்ற 5 மீனவர்கள் மீன்பிடிப் படகுடன் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 29 ஆம் திகதி கடலுக்குச் சென்ற இவர்கள் இன்னும் கரை திரும்பவில்லை.

கடந்த நான்கு நாட்களாக இந்த மீனவர்களுடனான தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மீன்பிடி திணைக்களத்துடன் இணைந்து மீன்பிடி மற்றும் நீரியல் வளத் துறை அமைச்சு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. (ஸ்ரீ-2)

# இலங்கையர்களுக்கு ஒன் எரைவல் முறையில் விசா வழங்க பிலிப்பைன்ஸ் இணக்கம்

இலங்கைப் பிரஜைகளுக்கு ஒன் எரைவல் முறையில் விசா வழங்குவதற்கு பிலிப்பைன்ஸ் இணக்கம் தெரிவித்துள்ளது.

மேலும் இரு நாடுகளுக்கும் இடையில் நேரடி விமானசேவைகளை ஆரம்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் டி.எம்.ஜயரட்ண பிலிப்பைன்ஸிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள நிலையில் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பொனிக்தோ அகீனோவைச் சந்தித்து பிரதமர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

வர்த்தக உறவுகளை விஸ்தரித்தல், பாதுகாப்பு விவகாரங்களை மேலும் வலுப்படுத்திக்கொள்ளல் போன்றன தொடர்பில் விரிவான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் விரைவில் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

இதேவேளை, இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு பிலிப்பைன்ஸ் ஜனாதிபதிக்கு பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# இலங்கைப் பணிப்பெண்ணும் சிசுவும் குவைத்தில் மரணம்

குவைத்தில் பணியாற்றிய இலங்கைப் பணிப்பெண் ஒருவரும் அவருக்குப் பிறந்த சிசுவொன்றும் இறந்துள்ளதாக அராப் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

குவைத்தின் குவாரெய்ன் நகரில் பணியாற்றிய இலங்கைப் பணிப்பெண்ணும் அவருக்குப் பிறந்த சிசுவும் பிரசவத்தின் போதுஅவர் பணியாற்றிய எஜமானார் வீட்டில் இறந்துள்ளனர்.

மேற்படி பணிப்பெண் பணியாற்றிய வீட்டு எஜமானரிடமிருந்து உள்துறை அமைச்சின் செயற்பாட்டுப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற தொலைபேசி அழைப்பை அடுத்தே பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் மருத்துவ சிகிச்சைக் குழுவினரும் குறித்த வீட்டிற்குச் சென்றுள்ளனர்.

அவர்கள் அங்கு செல்ல முன்பே தாயும் சிசுவும் இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. பிரசவத்தின்போது குறித்த பெண் கடுமையான வேதனைகளை அனுபவித்ததாகவும் வீட்டில் மருத்துவ வசதிகள் இன்மையால் இருவரும் இறந்துவிட்டதாக விசாரணைகளின்போது வீட்டு எஜமானார் கூறியுள்ளார் .எனினும் இம்மரணங்கள் குறித்த விசாரணைகள் நடைபெற்று வருகின்றன . (ஸ்ரீ-2)

# இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டி

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் வடமராட்சியில் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான அணிக்கு 20இற்கு 20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கரவெட்டி மகேசன் அணியை எதிர்த்து கரவெட்டி கலட்டி ஐக்கிய விளையாட்டு கழகம் மோதவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு பருத்தித்துறை சென்தோமஸ் அணியை எதிர்த்து கரவெட்டி சுடர் ஒளி அணி மோதவுள்ளது . (ஸ்ரீ-24)

# விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

(யாழ்ப்பாணம்)

விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

விவசாய சம்மேளன நிர்வாக உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் கலந்து கொண்டிருந்த விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் தமது பிரதேச விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துரைத்தனர். இதன்போது அவர்கள் தாம் சந்தைப் படுத்தும் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை என்றும் இதனால் ஏற்படும் சவால்கள் பற்றியும் பொருட்களை நிறுப்பதில் உள்ள குளறுபடிகள் பற்றியும் எடுத்துக் கூறியதுடன் தாம் வியாபாரம் செய்வதற்கான சந்தைக் கட்டடங்கள் அமைத்து தரும்படியும் கட்டாக்காலி மாடுகள் பயிர்களை நாசம் செய்வது பற்றியும் எடுத்து விளக்கினர்.

அதுமட்டுமல்லாது சந்தைப்பகுதியில் அமைக்கப்பட வேண்டிய குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் இவற்றை பிரதேச சபையினூடாக செய்து தரவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேற்படி விவசாயிகளின் தேவைகளைக் கேட்டறிந்த அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் கணிசமாக உள்ளது. இப்பிரச்சினைகளை உடன் தீர்ப்பதானது மிகவும் கடினமான விடயமாகும். இப் பிரச்சினைகளை பகுதி பகுதியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ். மாவட்டத்தின் பிரதான சந்தைகளாக விளங்கும் திருநெல்வேலி, மருதனார் மடம், சுன்னாகம், சாவகச்சேரி, நெல்லியடி போன்ற சந்தைகளுக்கு விஜயம் செய்யவுள்ளோம். எனது பயணத்தின் போது விவசாயத்துடன் தொடர்புடைய அதிகாரிகளையும் அழைத்துச் செல்லவுள்ளேன். இங்கு சென்று விவசாயிகள் எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளவுள்ளேன்.

எனவே, அவ்வப்பிரதேச சபைகள் சந்தைக்கான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்குமாறு வேண்டுகிறேன். அத்துடன் எதிர்காலத்தில் விவசாய உற்பத்திகளை எப்படி அதி களவில் உற்பத்தி செய்யலாம் என சிந்திக்க வேண்டும். அது மட்டுமன்றி மண்ணாய்வு ஒன்றையும் தரிசு நிலங்கள் பற்றிய மதிப்பீடு ஒன்றையும் நாம் மேற்கொள்ளவுள்ளோம் என்றார். (ஸ்ரீ-4)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வலிகாமம் கல்வி வலயத்தின் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றி உதவிக்கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள

**திருமதி றூபா உதயரட்ணம்**


(B.Com, PGDE MERIT, MA PLANNING)

அவர்களை பாராட்டுவதுடன் மேலும் பல உயர்வுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள்
பண்டத்தரிப்பு குடும்பப்பாடசாலை

(4963)





இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளை ஊழியர்கள் சுன்னாகத்தில் உள்ள வாழ்வக சிறார்களுடன் வருட இறுதிக் கொண்டாட்டத்தினை அண்மையில் கொண்டாடினர். இதில் முகாமையாளர் பொ. சிவபாதம் அன்பளிப்புத் தொகையை வாழ்வகப் பொறுப்பாளர் எஸ். இரவீந்திரனிடம் வழங்குவதையும் அருகில் வங்கி உத்தியோகத்தர்கள் க.கை. விக்கினேஸ்வரன், என். குணபாலன், ரி.சுதாகரன் ஆகியோர் நிற்பதனையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# அமைச்சர் ஜோன் செனவிரட்ன யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

## புதிய கட்டடங்களை திறந்து வைப்பார்

(பருத்தித்துறை)

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவரது விஜயத்தின்போது பருத்தித்துறையில் இரண்டு புதிய கட்டடங்கள் திறந்து வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்திற்கான விடுதிக் கட்டடமும் கற்கோவளம் பகுதியில் உத்தியோகத்தர்களுக்கான கட்டடமும் திறந்து வைக்கப்படவுள்ளன.

(ஸ்ரீ-10)

# தென்னை வளத்திலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள் உருவாக்கல் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கச்சாய் பிரதேசத்தில் தென்னை வளத்திலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள் உருவாக்கல் பயிற்சிநெறி எதிர்வரும் ஜூன் மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சிநெறியில் கலந்துகொள்ள விரும்புவர்கள் கைத்தொழில் அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை கட்டடம், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு நேரில் வருகை தருவதன் மூலம் அல்லது 021 2222421 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பினை மேற்கொள்வதனூடாக தமது பெயர் விபரங்களை எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் பதிவு செய்ய முடியுமென பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# இளைஞர் கழகங்களுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள்

(கரவெட்டி)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் பற்றிய விபரம் விளையாட்டுப் பொறுப்பாளர் வரதராஜன் மனோராஜினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஆண்களுக்கான துடுப்பாட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஆண்களுக்கான எல்லே போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி அல்வாய் விளையாட்டுக் கழகத்திலும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு கம்பர்மலை கம்பன் விளையாட்டுக்கழக மைதானத்திலும் பெண்களுக்கான துடுப்பாட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி பி.ப.3 மணிக்கு இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்திலும் ஆண்களுக்கான கபடிப் போட்டி 25ஆம் திகதி பி.ப.3மணிக்கு வதிரி டைமன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி 28 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்திலும் பெண்களுக்கான எல்லே போட்டி அன்றையதினம் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்திலும் ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி 29 ஆம் திகதி வதிரி டைமன் விளையாட்டுக்கழக மைதானத்திலும் நடைபெறவுள்ளது.

இதில் பதிவு செய்த கழகங்கள் போட்டி நடைபெறும் தினங்கள் உரிய நேரத்துக்கு சமுகம் தந்து போட்டி அட்டவணை தயாரிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-24)

# இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின

(அல்வாய்)

2010 டிசெம்பர் நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையின்போது ஆயிரக் கணக்கான மாணவர்கள் ஆள் அடையாளத்தை பரீட்சை மண்டபத்தில் உறுதிப்படுத்துவதற்காக பரீட்சை திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்க தவறியதன் காரணமாக அவர்களது பெறுபேறுகள் வெளியிடப்படாமல் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த பரீட்சை பெறுபேறுகள் பரீட்சைத் திணைக்களத்தினால் நேற்று முன்தினம் முதல் பகுதி பகுதியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். இதற்கமைய வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள சில பாடசாலை மாணவர்களுக்கு இப்பெறுபேறுகள் கிடைத்துள்ளதாக அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் பரீட்சை திணைக்கள புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளும் உதவிப் பரீட்சை ஆணையாளரும் மாவட்டங்கள் தோறும் நேரடியாகச் சென்று சம்பந்தப்பட்ட மாணவர்களை கடிதம் மூலம் அழைத்து பரிசீலனையையும் விசாரணைகளையும் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதன் பயனாக பெறுபேறுகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் பாடசாலைகள் மூலமாக பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-19)

# செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

கட்டாயக்கல்விக் குழுக்களின் வேலைத் திட்டங்களான பாடசாலை செல்லாத மாணவர்களை இனங்கண்டு பாடசாலையில் சேர்த்தல், பாடசாலை சென்று பல்வேறு காரணங்களால் இடைவிலகிய மாணவர்களை இனங்கண்டு பாடசாலையில் சேர்த்தல், பாடசாலை வரவு ஒழுங்கீனமான மாணவர்களின் வரவைச் சீராக்குதல் போன்ற வேலைத்திட்டங்களை வலுப்படுத்தும் நோக்கோடு நாளை மறுதினம் சனிக்கிழமை ஆசிரிய நிலையத்தில் குறிப்பிட்ட பாடசாலை அதிபர்களுக்கும் பாடசாலை அபிவிருத்தி செயலாளர்களுக்கும் செயலமர்வு நடைபெறவுள்ளது.

மேற்படி செயலமர்வில் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி எ.அன்ரன் யோகநாயகம், பிரதிக் கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம், செயற்றிட்ட அலுவலர் ந.சண்முகராஜா ,சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி, சங்கானை கோட்டக் கல்விப்பணிப்பாளர் துரை எங்கரசு ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

(ஸ்ரீ-2)

# ஓய்வுபெற்ற, இடமாற்றம் பெற்றுச்சென்ற அதிபர்களுக்கு சேவைநலன் பாராட்டு விழா

(சுன்னாகம்)

உடுவில் கோட்டத்திலிருந்து ஓய்வுபெற்ற, இடமாற்றம் பெற்றுச் சென்ற அதிபர்களுக்கான சேவைநலன் பாராட்டு விழா ஜூன் மாதம் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்குத் தலைவராக உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை அதிபர் சி.பஞ்சாட்சரம், செயலாளராக சங்குவேலி அ.த.க. பாடசாலை அதிபர் அ.ஜெயக்குமார், பொருளாளராக உடுவில் அ.மி.த.க. பாடசாலை அதிபர் செ.முரளிமோகன் ஆகியோர் செயற்படவுள்ளனர்.

அத்துடன் போசகராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (ஸ்ரீ-54)




# பொதுக்கூட்டம் திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய நிர்வாக சபைத் தெரிவு, பொதுக்கூட்டம் என்பன எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு ஆலயத்துடன் சம்பந்தப்பட்ட உபயகாரர்கள், திருப்பணி நன்கொடையாளர்கள், அடியார்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள்.

இதேவேளை, இக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# வடமராட்சியில் வெசாக் பண்டிகை கொண்டாட்டம்

(கரவெட்டி)

வடமராட்சிப் பிரதேசத்தில் சிங்கள மக்களின் வெசாக் பண்டிகைத் திருநாள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.


சிங்கள மக்களின் விசேட பெருநாட்களில் ஒன்றான வெசாக் பண்டிகை பெருநாள் எதிர்வரும் 20ஆம் திகதிவரை கொண்டாடப் படவுள்ளது.

வடமராட்சி பிரதேசத்தில் இராணுவ முகாம்கள் மற்றும் பொது நிலையங்கள் மின்குமிழ்களால் அலங்கரிக்கப்பட்டு வெசாக் கூடுகள் தொங்கவிடப்பட்டுள்ளன.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை முன்பாக வைத்தியசாலைக் கடமையில் ஈடுபடும் பொலிஸாரும் அப்பகுதியிலுள்ள முச்சக்கரவண்டி சாரதிகளும் இணைந்து வீதியோரத்தை வெசாக் கூடுகளால் சிறப்பாக அலங்கரித்து பல வர்ண மின்குமிழ்களையும் ஒளிர விட்டுள்ளனர்.

(ஸ்ரீ-24)





யாழ்.மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஷ் ஆகியோர் உரையாற்றுவதனையும் கலந்துகொண்ட விவசாய சம்மேளன நிர்வாக உறுப்பினர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: என்.குமார், அ.சார்ள்ஸ்)

# அதிகாரப் பகிர்வு தொடர்பில் எட்டப்படும் இணக்கப்பாடுகளுக்கு ஆதரவளிக்கப்படும்



## ஐ.தே.க.அறிவிப்பு

(கொழும்பு)

**ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் அதிகாரப்பகிர்வு தொடரில் எட்டப்படும் இணக்கப்பாடுகளுக்கு ஆதரவளிக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.**

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணக்கப் பாடொன்றை அடைந்தால் அதற்கு பூரண ஆதரவளிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க வாக்குறுதி அளித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகள் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தகவல்கள் வழங்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். கட்சியின் தலைமைத்துவம் இந்தப் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தெளிவுபடுத்தி வருவதாகக் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் அண்மையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். செனட் சபை உருவாக்கம் குறித்து பேசுவதற்கு இது உகந்த தருணம் அல்ல எனவும் அதிகாரப் பகிர்வு குறித்து கூடிய விரைவில் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என அரசாங்கத்திடம் வலியுறுத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## பூநகரியில் வெசாக் கொண்டாட்ட நிகழ்வு

(பூநகரி)

பூநகரி வாடியடி நகர்ப் பகுதியில் கோட்டை மைதானத்திலும் வாடியடி மைதானத்திலும் 20 இற்கும் மேற்பட்ட பல்வேறு காட்சிகளை சித்திரிக்கும் வெசாக் காட்சிகள் பெரியளவில் அமைக்கப்பட்டிருந்தன.

மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில் நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு பல்வேறு நிகழ்வுகளை சித்திரிக்கும் மாபெரும் ஊர்வலத்துடன் வெசாக் நிகழ்வு நடைபெற்று மைதானத்தை வந்தடைந்தது.

இந்நிகழ்வில் பூநகரி கோட்டத்தைச் சேர்ந்த 10 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களின் காவடியாட்டம், கரகாட்டம், கும்மி, கோலாட்டம் போன்ற நிகழ்வுகளை காட்சிப் படுத்தியவாறு 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கு பற்றினர்.

இராணுவ வீரர்களின் தீப் பந்த விளையாட்டுக்கள், பொய்க்கால் நடனம், காவடியாட்டம், கண்டிய நடனம் எனப் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வுகளில் இராணுவ வீரர்கள், பொது மக்கள் என பல ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-84)

# பல்கலை. விரிவுரையாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்

## உயர் கல்வியமைச்சு தெரிவிப்பு

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிரச்சினைகளுக்கு இன்னும் சில தினங்களில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

விரிவுரையாளர்களின் பிரச்சினை தொடர்பில் தற்போது ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாக அமைச்சின் செயலாளர் சுனில் ஜெயந்த நவரத்தின தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளத்தினால் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்காவுக்கு வழங்கப்பட்ட கடிதம் தற்போது ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்தப் பிரச்சினையை சுமுகமான முறையில் தீர்க்க எதிர்ப்பார்ப்பதாகவும் உயர் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் சுட்டிக் காட்டினார். (ஸ்ரீ-2)

# திருகோணமலை புறாதீவு கடற்பாதுகாப்பு சரணாலயம் மக்கள் பார்வைக்கு திறப்பு

(கொழும்பு)

திருகோணமலை புறாதீவு எனப்படும் கடற்பாதுகாப்பு சரணாலயம் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் மக்கள் பார்வைக்கு திறந்து விடப்படவுள்ளதாக வனஜீவராசிகள் திணைக் களம் தெரிவித்துள்ளது.

பயங்கரவாத செயற்பாடுகள் காரணமாக கடந்த காலங்களில் இந்த தீவினை பார்வையிடுவதற்கான சந்தர்ப்பம் மக்களுக்கு வழங்கப்படவில்லை என வன ஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம் சந்திரவங்ச பத்திராஜ குறிப்பிட்டார்.

இதேவேளை குறித்த பகுதியிலுள்ள முருகை கற்பாறைகளையும் பார்வையிடும் வாய்ப்பு மக்களுக்கு வழங்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

நாட்டிற்கே உரித்தான பறவை இனங்கள் மற்றும் சுற்றுலா பறவைகள் என்பவற்றை இந்த தீவில் கண்டுகளிக்க முடியும் என வனவிலங்குகள் பணிப்பாளர் நாயகம் சந்திரவங்ச பத்திராஜ தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# சூரிய சக்தியில் இயங்கும் மோட்டார் கார் கண்டுபிடிப்பு

## கல்முனை மாணவன் சாதனை

கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் விஞ்ஞானப்பிரிவில் கல்வி பயிலும் நடராஜா சஞ்சீவநாத் என்ற மாணவன் சூரிய சக்தியில் இயங்கும் மோட்டார் கார் ஒன்றைக் கண்டுபிடித்து சாதனை படைத்துள்ளார்.

திருக்கோவிலைச் சேர்ந்த இம்மாணவன் புதிய கண்டுபிடிப்புகளை கண்டு பிடிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். சுற்றுப் புறச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் சூரிய சக்தியில் இயங்கும் இம் மோட்டார் கார் கண்டுபிடித்ததன் மூலம் தமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளதாக பாடசாலையின் அதிபர் வீ.பிரபாகரன் தெரிவித்தார்.

சூழலில் கிடைக்கும் கழிவுப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இந்த மோட்டார் காரினை தயாரிக்க 22 ஆயிரம் ரூபா செலவு மட்டுமே ஏற்பட்டுள்ளது. இதில் இரண்டு பேர் செல்ல முடியும்.

அத்தோடு அங்கவீனமானவர்களுக்கும் சிறு வியாபாரத்தில் ஈடுபடுவோருக்கும் மிகவும் பொருத்தமானதாகவும் பாதுகாப்பான வாகனமாகவும் உள்ளதாகவும் மணிக்கு 25 கிலோ மீற்றர் வேகத்தில் இது பயணிக்கக் கூடியதாகவும் உள்ளது.

வெகு விரைவில் நீரிலும் நிலத்திலும் செல்லக் கூடிய வாகனம் ஒன்றை தயாரிக்கவுள்ளதாகவும் இந்த மாணவன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கையில் 17.3 மில்லியன் கைத்தொலைபேசிகள் பாவனையில்


இலங்கையில் தற்சமயம் 17.3 மில்லியன் கைத்தொலைபேசிகள் பாவனையில் உள்ளதென அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.


தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப தினம் சம்பந்தமாக விடுத்த விசேட செய்தியில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிராமப் புறங்களுக்கு தொலைத் தொடர்பு சேவையை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்கியிருக்கின்றது. அதேவேளை, தற்சமயம் 30 சதவீதமாகவுள்ள கணனி அறிவு பெற்றவர்களின் எண்ணிக்கையை 75 சதவீதமாக அதிகரிப்பதற்கு பாரிய அளவிலான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துரித முறையிலான தொழில்நுட்பத்தை சமூகத்தில் சகல தரப்பினருக்கும் கையளிக்கவென சர்வதேச தொலைத்தொடர்புகள் சங்கம் மேற்கொண்ட நடவடிக்கையினையும் அமைச்சர் பாராட்டியுள்ளார்.

இதன் மூலம் பொருளாதார முன்னேற்றத்தை நாடு அடைய முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)





யாழ்/ நவாலி சென். பீற்றேஸ் றோ.க. த.க பாடசாலையின் தரம் 1 மாணவர் களுக்கான மாதிரிப் புத்தாண்டு விழா அண்மையில் நடைபெற்றது.வலிகாம கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்.திருமதி றூபா உதயரெட் ணம் உரையாற்றுவதையும் அருகில் சண் டிலிப்பாய் கோட்டக்கல்வி ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி நளினி அகில தாஸ்,அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் முட்டி உடைத்தல் விளையாட்டு நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

# பல்கலைக்கழக மாணவருக்கான கட்டாய தலைமைத்துவ பயிற்சிக்கு எதிர்ப்புக்கள்

(கொழும்பு)

புதிதாக பல்கலைக்கழக அனுமதி பெறுவோருக்கு இராணுவ முகாம்களில் வழங்கப்படும் தலைமைத்துவ பயிற்சியை கட்டாயமாக்கும் உயர்கல்வி அமைச்சின் தீர்மானத்திற்கு கல்வித்துறை ஊழியர்கள் தமது எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

இத்தீர்மானத்தின் காரணமான அதிக அளவிலான மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் செல்வதற்கான ஆவல் குறைந்து வருகின்றது என இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மாணவர்கள் இராணுவ முகாமில் தங்கியிருந்து பயிற்சி பெற வேண்டியிருப்பதையிட்டு தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மாணவருக்கு இந்த பயிற்சியை கட்டாயமாக்கும் அதிகாரத்தை உயர்கல்வி அமைச்சோ பல்கலைக்கழக மானியங்கள் ஆணையமோ கொண்டிருக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# சந்தேகத்துக்குரிய பெருந்தொகை ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்துடனான பெருந்தொகை ஆவணங்கள் சந்தேகத்தின் பேரில் விமான நிலையத்தில் வைத்துக் கைப்பற்றப்பட்டுள்ளன. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய சுங்கப் பிரிவினரே பிரஸ்தாப ஆவணங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

பெருந்தொகையான இலச்சினைகள் மற்றும் பதக்கங்கள் என்பவற்றை வெளிநாடு எடுத்துச் செல்வதற்கான பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரக் கடிதமொன்றும் கைப்பற்றப்பட்ட பொருட்களில் உள்ளடங்குவதாக விமான நிலைய வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பயணி ஒருவரது பையை சோதனையிடுகையிலேயே மேற்படி பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக சுங்கவரித் திணைக்களத்தின் பிரதி இயக்குநர் சமந்த குணசேகர தெரிவித்துள்ளார்.

அதன் போது அவற்றை வைத்திருந்த பயணியானவர் மேற்குறித்த பொருட்களை கொண்டு செல்வதற்கான பாதுகாப்பு அமைச்சின் தடைநீக்க உத்தரவுக்கடிதம் தன்னிடம் இருப்பதாக பிரஸ்தாபித்துள்ளதுடன் அதனைக் காண்பித்துள்ளார்.

எனினும் கைப்பற்றப்பட்ட குறித்த பொருட்கள் தொடர்பாக சந்தேகம் நிலவுவதாக சமந்த குணசேகர தெரிவித்துள்ளார். அத்துடன் இது தொடர்பாக மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒரு சிலர் இவ்வாறான பொருட்களை கடத்திச் சென்று வெளிநாடுகளில் பணத்தை குறிக்கோளாகக் கொண்டு போலியாக ஆவணங்களைத் தயாரிப்பதனால் இது தொடர்பில் அச்சம் நிலவுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# இந்தியாவிலிருந்து சீனி ஏற்றிவந்த கப்பல் காங்கேசன்துறையை வந்தடைந்தது

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து 2000 மெற்றிக் தொன் சீனியை ஏற்றி கொண்டு கப்பலொன்று காங்கேசன்துறையை வந்தடைந்துள்ளது. இந்தக் கப்பலிலிருந்து சீனியை இறக்கும் நடவடிக்கை தற்சமயம் இடம் பெற்று வருகின்றன.

கடந்த மாதம் 2 இலட்சம் சீமெந்து பைக் கற்றுக்களை ஏற்றி வந்த கப்பல் மயிலிட்டி துறைமுகத்தில் நிறுத்தப்பட்டு சீமெந்து பைக் கற்றுக்கள் இறக்கப்பட்டன.

எதிர் காலத்தில் கிழங்கு, வெங்காயம், தானிய வகைகள் என்பவற்றை ஏற்றிக் கொண்டு மற்றுமொரு கப்பலும் காங்கேசன்துறையை வந்தடையவுள்ளது.

சரக்கு கப்பல்கள் காங்கேசன்துறைக்கு வர ஆரம்பித்ததையடுத்து இறக்குமதியாளர்களும் சுமைதூக்கும் ஊழியர்களும் பெரிதும் நன்மையடைந்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

# திருவிழாவிற்குச் சென்றவர் நீரில் மூழ்கி மரணம்

மட்டக்களப்பு கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கோராவெளி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்த்தி உற்சவத்திற்காக நண்பர்களுடன் சென்ற இளைஞன் ஒருவர் கோராவெளி ஆற்றில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

வந்தாறுமூலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவசாமி (வயது 26 ) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவரது சடலம் வாழைச்சேனை பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்படடு பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி உற்சவத்தின் இறுதி நாளாகிய நேற்று முன்தினம் ஆலயத்தில் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டுள்ளது. இதனால் ஒதுக்குப்புறமான இடத்திற்கு சென்று குளித்துக் கொண்டிருந்த வேளையிலே மேற்படி இளைஞன் ஆற்றில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.(ஸ்ரீ-2)

# மொழிக் கொள்கையை பின்பற்றாத பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை

## அமைச்சர் வாசுதேவ எச்சரிக்கை

(கொழும்பு)

உத்தியோகபூர்வ மொழிக் கொள்கையை பின்பற்றாத பொலிஸாருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய மொழிகள் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் சகல பொலிஸ் உத்தியோ கத்தர்களும் தேசிய மொழிக் கொள்கையை பின்பற்ற வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

உத்தியோகபூர்வ மொழிக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள மற்றும் தமிழ் மக்களின் சம உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

பொலிஸ் மோட்டார் போக்குவரத்து பிரிவின் அநேக பதாகைகளில் தமிழ்மொழி கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் அனைத்து அரச நிறுவனங்களும் தேசிய மொழிக் கொள்கைகளை பின்பற்ற வேண்டும் என்ற போதிலும் பொலிஸ் திணைக்களம் முழுமையாக தேசிய மொழிக் கொள்கையை பின்பற்றுவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து பொலிஸாருடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் பொலிஸார் தொடர்ச்சியாக தமிழ் மொழியை புறக்கணித்தால் சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# ஐ.நா.வுக்கான இலங்கைத் தூதுவராக சவேந்திர சில்வா நியமனம்

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. அலுவலகத்துக்கான இலங்கையின் தூதுவராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இதுவரைகாலமும் ஐ.நா.வுக்கான துணை நிரந்தரப் பிரதிநிதி என்ற பொறுப்பில் கடமையாற்றிய மேஜர் ஜெனரல் சவேந்தி சில்வா இலங்கையின் போர்குற்றங்கள் தொடர்பான விடயத்தில் உயர்மட்ட இராஜந்திரிகளுடன் தொடர்புகளை பேண வேண்டியிருப்பதன் காரணமாகவே அவருக்கு இந்தப் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப புதிய பொறுப்பில் அவர் இம் மாதம் ஐந்தாம் திகதியிடப்பட்ட நியமனக்கடிதமொன்றின் மூலம் நியமிக்கப்பட்டுள்ளார். அவரது நியமனம் தொடர்பில் அமைச்சரவையின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது.

இதுவரை ஐ.நா.வுக்கான தூதுவராக கடமையாற்றிய ஷேணுகா செனவிரத்ன மிக விரைவில் வேறு நாடொன்றில் தூதுவர் பதவிக்கு நியமிக்கப்படவுள்ளார். (ஸ்ரீ-2)





யாழ். மகாஜனக் கல்லூரியில் மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் பாடசாலையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் அதிபர் சிரேஷ்ட மாணவ தலைவிக்கு சின்னம் சூட்டுவதையும் மாணவத்தலைவர்கள் உறுதிமொழி செய்து கொள்வதையும் படங்களில் காணலாம்.

# இலங்கையை உலுப்பிவரும்


# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை

133. ..வைத்தியர்களால் சேகரிக்கப்பட்ட காயமடைந்த மற்றும் மரணமாகியவர்கள் பற்றிய, ஆஸ்பத்திரிகளால் மற்றும் மாவட்ட அனர்த முகாமைத்துவ அலகுகளினால் ஒதுக்கப்பட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையில் சில மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இறுதிக்கட்டத்தின் போது சுமார் 40 ஆயிரம் சத்திரசிகிச்சை நடவடிக்கைகளையும் 5ஆயிரம் அறுவைச் சிகிச்சை மூலம் உறுப்புக்கள் அகற்றப்பட்டதையும் ஒரு மதிப்பீடு கொண்டுள்ளது. காயம் மற்றும் மரணங்களுக்கிடையிலான 1:2 அல்லது1:3 என்ற விகிதாசாரத்தின்படி பார்தால்

மிகஅதிகளவிலான பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை அது குறிக்கக் கூடியதாகவுள்ளது. ஏனையவர்கள் இந்த மதிப்பீட்டை 75ஆயிரம் எனக்குறிப்பிடுகிறார்கள், அதாவது யுத்தப்பிரதேசத்திலிருந்து வெளியாகியவர்களின் எண்ணிக்கை சுமார்(2 இலட்சத்து 90ஆயிரம்) மற்றும் யுத்தவலைமத்திலிந்ததாக மதிப்பீடு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை (யுத்தசூன்ய வலயத்தில் ஜனவரி முதல் இருந்த சுமார் 3 இலட்சத்து 30 ஆயிரம் அத்துடன் அதற்கு முன்னர் எல்.ரி.ரி.ஈ. யின் பிரதேசங்களில் இருந்து வெளியேறியசுமார் 35 ஆயிரம்)

134. ஐக்கிய நாடுகள் சார்ந்த குழுவே தகவலின் ஒரே மூலமாக இருந்தது பகிரங்கப்படுத்தப்படாத ஆவணமொன்றில், கணிப்பு நடவடிக்கைகள் கஷ்டமாகும்வரை ஆகஸ்ட் 2008 முதல் 2009 மே 13ஆம் திகதி வரை மொத்தம் 7ஆயிரத்து 721பேர்



கொல்லப்பட்டுள்ளதாகவும் 18 ஆயிரத்து 479 பேர் காயமடைந்துள்ளதாகவும் அது மதிப்பீடு செய்துள்ளது.2009 பெப்ரவரி ஆரம்பத்தில் தகவலுக்கான் பிரதேசம் கஷ்டமாக இருந்தபோதிலும் காயமடைந்த மற்றும் இறந்தவர்கள் எண்ணிக்கையைத் தொகுக்கும் செயற்பாடொன்றை ஐ.நா. ஆரம்பித்தது. இச் செயற்பாட்டின்போது ஆர்.டி.எச்.எஸ். இடம் கிடைக்கும் கணக்கு விபரங்களை அது அடிமட்டக்கோடாக எடுத்துக் கொண்டதோடு உறுதிப்படுத்த முடியாத அல்லது தமிழ்நெற் மற்றும் வன்னிக்கு வெளியே இருந்துவந்த அரசாங்கக்கணிப்புகள் போன்ற பக்கச்சார்பான மூலங்களிலிருந்து கிடைத்த தகவல்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.

(50) 135. ஐ.நா. நாடுசார்ந்த குழுவினால் கணிக்கப்பட்ட எண் ஒரு ஆரம்பத்தை வழங்குகிறது என்ற போதிலும் பலகாரணங்களுக்காக அது மிகக்குறைவாக இருந்தது. முதலாவதாக, எல்.ரி.ரி.ஈ. கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் செயற்பட்ட அவதானிப்பாளர்கள் வலைப்பின்னல் ஊடாக நிஜமாகவே அவதானிக்கப்பட்ட காயமடைந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பற்றிய விபரத்தில் மாத்திரம் அது தங்கியிருக்கிறது.

இப்படிப்பட்ட பலர் அவதானிக்கப்படாதிருக்கலாம். இரண்டாதவதாக ஐ.நா. மே 13 ஆம் திகதி கணக்கெடுப்பதை நிறுத்தியபின்னர், காயமடைந்த மற்றும் இறந்த பொது மக்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்திருக்கலாம். ஷெல்வீச்சின் தீவிரத்தன்மை காரணமாக, பல பொதுமக்கள் அவர்கள் இறந்த இடத்திலேயே விட்டுவிடப்பட்டதோடு அவை பதியப்படவோ, ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்படவோ அல்லது புதைக்கப்படவோ இல்லை. இதனால், உண்மையிலேயே மொத்த எண்ணிக்கை ஐ.நா. வின் கணிப்பை விட மிகஅதிகமாகியிருக்கும்.

136. ,அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்ளும்போது ஐ.நா. காயமடைந்த மற்றும் இறந்தவர்களின் கூடிய எண்ணிக்கையை குறிப்பிட்டதோடு, அதன் குறிப்பான மதிப்பீடுகளை என்றுமே பகிரங்கப்படுத்தவில்லை. ஐ.நா. வழங்கிய கணக்குகளை அவை கற்பனை செய்யப்பட்டவை எனவும் அது ஐ.நா.வின் காயமல்லவென்றும் அரசாங்க அதிகாரிகள் கடுமையாக அக்கணிப்புக்களைச் சர்ச்சைக்குட்படுத்தினர். பகிரங்கமாக யுத்தத்தினால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட பலத்த சேதம் பற்றி அல்லது காயமடைந்தவர்கள் மற்றும் இறந்தவர்களின் ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு அதிகமாக இருந்தது என ஐ.நா. குறிப்பிட்ட போதிலும் உண்மையான எண்ணிக்கையை சரி பிழை பார்க்க முடியவில்லை. குறிப்பான கணிப்புக்களை வழங்குவதில்லை என்ற முடிவு பொதுமக்கள் காயமடைந்தது மற்றும் மரணித்தது பற்றியசெய்தி அறிக்கை விடுப்பதை முக்கியமற்றதாக்கி விட்டது. ஆயினும், ஜனவரி 20ஆம் திகதி முதல் அனேகமாக யுத்தசூனிய வலயங்களுள் 2ஆயிரத்து 800பொதுமக்கள் கொல்லப்பட்டும் 7 ஆயிரதிற்கும் அதிகமானோர் காயமடைந்துமிருக்கலாம் எனமனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகள் பகிரங்கமாக அறிவித்த 2009 மார்ச் 13ஆம் திகதி வரை இந்நிலைப்பாடு பேணப்பட்டு வந்தது.

137.யுத்தத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட ஆய்வுகளின்படி, தம் சொந்தங்களின் மரணம்பற்றி அறிவிப்பவர்களின எண்ணிக்கை அதிகமாகவுள்ளது. பல நம்பகமான மூலங்களின் மதிப்பீட்டின் படி 40ஆயிரம் வரையிலான பொது மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம். யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் கழிந்தபின்பும், பொது மக்கள் மரணம்பற்றிய ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய ஒரு கணிப்பு இல்லை என்ற போதிலும், இத்தருணத்தில் 40ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்படடிருக்கலாம் என்பதை நிராகரிக்க முடியாது என பல மூலங்களின் தகவல் குறிப்பிடுகின்றது. பாதிக்கப்பட்ட அனைவர் பற்றி இனங்காண்பதற்கும் கொல்லப்பட்ட பொதுமக்கள் பற்றிய சரியானதொரு கணக்கைப் பெறுவதற்கும் உரியதொரு புலனாய்வு மாத்திரமே வழிவகுக்கும்.



**பாதுகாப்பு விடையத்திற்கே அரசாங்கம் முக்கியத்துவம் அளித்தது.**

(51) (ஊ) யுத்த வலயத்திற்கு வெளியே மற்றும் பின்னர் நடந்தேறிய சம்பவங்கள் தொடர்பான நம்பத்தகு குற்றச்சாட்டுக்கள்

138. வன்னி யுத்தத்தில் பிழைத்த பொதுமக்களின் இக்கட்டு நிலை அரசாங்கக் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களுக்குச் சென்றதும் முடிவுக்கு வரவில்லை. வன்னியிலிருந்து வெளியேறும் பெருந்திரளான மக்களை வரவேற்கத்தான் தயார் என அரசாங்கம் 2009 ஜனவரியில் இருந்தே அறிவித்திருந்த போதிலும், பெருந்திரளான மக்கள் வெளியே வந்தபோது அதற்கான போதிய வசதியினை அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கவில்லை என்பதோடு, அதனைச் சமாளிப்பதற்கும் கஷ்டப்பட்டது. பொதுவாக மனிதாபிமானத் தேவைகள் மற்றும் இடம்பெயர்ந்தவர்களின் நலனை விட பாதுகாப்பு விடயங்களுக்கே அரசாங்கம் முன்னுரிமை வழங்கியது.

139. யுத்தவலயத்திலிருந்து பொது மக்கள் வெளியே வந்ததும், தமக்குக் கிடைக்கும் வரவேற்பினைப்பற்றி பலர் அச்சம் கொண்டிருந்தனர். அவர்கள் பாரிய அழுத்தங்களிற்குட்பட்டும் களைப்படைந்துமிருந்தனர். அனேகம்பேர் புதிதாக விதவைகளானவர்களாகவும் அனாதைகளாகவும் அல்லது அங்கவீனர்களாகவும் இருந்தனர்.

பல்லாயிரக்கணக்கான இடம் பெயர்ந்தோர் யுத்தத்தினால் ஏற்பட்ட காயங்களுடன் காணப்பட்டனர். அவர்களுள் குறைந்தபட்சம் 2ஆயிரம் அங்கவீனர்கள் இருந்தனர்.

பெருந்திரளானவர்கள் வெளியேறியதும் நிலைமை குழப்பமாக இருந்ததோடு, பல குடும்ப உறுப்பினர்கள் ஒருவரைவிட்டு மற்றவர் பிரிந்திருந்தனர். இச்செயற்பாட்டின் போது குடும்பங்கள் பிரிக்கப்பட்டு வெவ்வேறு முகாங்களில் வைக்கப்பட்டனர். குடும்பத்தினரைக் கண்டு பிடித்து ஒன்று சேர்ப்பதற்கான ஏற்பாடு போதியளவாக இருக்கவில்லை என்பதோடு, இதில் பங்களிப்பதற்கு ஐ.சி.ஆர்.சி. அனுமதிக்கப்படவில்லை.

140. குடும்பங்களில் இருந்து பிரிந்த நிலையில் பல பெண்கள் தனியாக்கப்பட்டதோடு பாலியல் வன்முறைக்கு பலியாகும் நிலையை எதிர்நோக்கவேண்டியிருந்தது. கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் போதியளவு போசாக்கு, மருத்துவப் பராமரிப்பு இன்றியும் யுத்தவலயத்திலிருந்தபோது பாரிய மனோதத்துவரீதியிலான அழுத்தங்களுக்கும் ஆளாகியிருந்தனர். கட்டாயமாகக் குழந்தைகள் அணி சேர்க்கப்பட்டமை தாய்மார்மீது பாரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

**141. யுத்தம் இளம் வயதினர் மேல் குறிப்பானதொரு தாக்கத்தைக் கொண்டிருந்தது**

14வயது சிறுவர்கள் கூட எல்.ரி.ரி.ஈ. யினால் பலவந்தமாக அணி சேர்க்கப்பட்டனர். இளவயதில் திருமணத்தை உள்ளிட்ட அணிசேர்ப்பதைத் தவிர்பதற்கான நடவடிக்கைகள், இளம்பெண், குழந்தைகளின் ஆரோக்கியம்மீது கெட்ட தாக்கத்தை ஏற்படுத்தியது.

மேலும், ஆயிரக்கணக்கான குழந்தைகள், ஷெல்வீச்சுக் காரணமாக மரணமடைந்து அல்லது அங்கவீனர்களாக ஆகினர். சில குழந்தைகள் பதுங்கு குழிகளில் இருந்து விளையாடுவதற்காக வெளியே சென்றதால் கொல்லப்பட்டார்கள். தீவிர போசாக்கு மதிப்பீட்டொன்றின் படி, 25 சதவீதமான குழந்தைகள் பாரிய ஊட்டச் சத்தின்மையால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

142. பலமுறை இடம்பெயர நேர்ந்ததால் பல குழந்தைகள் மனோதத்துவ ரீதியில் பாதிக்கப்பட்டிருந்தனர். பலர் தம் பெற்றோரை இழந்ததோடு, தனியாக வெளியேறியதால் அவர்கள் பதியப்படவில்லை. அநேகமான குழந்தைகள் சத்துணவின்றியும் பல சிறு குழந்தைகள் உலர் தன்மையினால் அல்லது வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

**தமிழாக்கம் தொடர் 18**

(தொடரும்)

# ராகு - கேது பெயர்ச்சி பலன்கள்

## 16.05.2011 முதல் 01.12.2012 வரை




**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

**வி.ஐ.பிக்கள் வந்திடுவார்!**

**விரும்பிய எல்லாம் தந்திடுவார்!**

*விதியை மதியால் வெல்லலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் விருச்சிக இராசி நேயர்களே!*

உங்கள் வாக்கு பலிக்கும். நீங்கள் காணும் கனவும் பலிக்கும். அதனால் தான் உங்களோடு, பழகுபவர்கள் எல்லோரும் உங்கள் யோசனைகளைக் கேட்டு நடக்கின்றனர். உங்கள் தோற்றப்பொலிவை பார்த்தோ, உங்கள் உடல் வலிமையைப் பார்த்தோ எடைபோட முடியாது. உடல் வலிமையைக் காட்டிலும், உள்ளத்தின் வலிமையை அதிகம் பெற்றவர்கள் விருச்சிக இராசிக்காரர்கள்தான்.

மூளை பலமே உங்களுக்கு மூலபலம். அதுவே உங்களுக்கு மூலதனம் என்றும் சொல்லலாம். சந்திரன் நீச்சம் பெற்ற இராசி உங்கள் இராசி என்றாலும், உங்கள் சிந்தனை உச்சம் பெற்றிருக்கும். யாருக்கும் வராத யோசனைகள் உங்களுக்கு வரும். மற்றவர்கள் பிரச்சினை எளிதில் தீர வழி வகுத்துக் கொடுப்பீர்கள்.

குரு உங்கள் இராசிநாதனோடு இணைந்து குருப்பெயர்ச்சியன்று உங்கள் இராசிக்கு 2,10,12 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். ஜீவன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு இந்த ஆண்டு போதுமான வருமானத்தை அள்ளிக் கொடுப்பார். பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். பக்கத்தில் இருப்பவர்களின் ஒத்துழைப்பும் கூடும்.

### ஆசைகள் நிறைவேறும் குருப்பெயர்ச்சி

இத்தனை மகத்துவம் வாய்ந்த உங்கள் இராசிக்கு இதுவரை ஐந்தாமிடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் 8.5.2011 முதல் ஆறாமிடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக, வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். மேடத்தில் சஞ்சரிக்கும் குரு உங்கள் ஆசைகளை எல்லாம் நிறைவேற்றுவார்.

ஆறில் குரு வருகிற பொழுது அதன் பார்வை பலம் கூடுதலாக இருக்கும். எதிரிகளை சமாளிக்கும் ஆற்றல் பெருகும். உதிரி வருமானங்களும், உத்தியோகம், தொழிலில் உன்னத முன்னேற்றமும் வந்து சேரும். பதவியில் இருப்பவர்கள் இரவு-பகலாக பாடுபட்டதற்கேற்ற பலன் இப்பொழுது கிடைக்கும்.

தனாதிபதியாகவும் பஞ்சமாதிபதியாவும் குரு விளங்குவதால், பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கையும் கூடும். தனவரவு அதிகரிக்கும். தாராளமாகச் செலவிட்டு, ஏராளமாக பொருட்களை வாங்கி மகிழவும் குருவை நீங்கள் முறையாக வழிபட வேண்டியது அவசியமாகும்.

குருப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே, கேட்டை அல்லது ரேவதி நட்சத்திரமும் இணையும் நாளில், நடைபெறும் குரு ஹோமங்களில் கலந்து கொள்வதன் மூலமும், விதியை மாற்றியமைக்கும் தலங்களுக்குச் சென்று வருவதன் மூலமும் வியக்கும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம்.

**தேவகுரு ஆறில் வந்தால் தேவைகள் பூர்த்தியாகும்! ஆவல்கள் தீர வேண்டின் அனுசரிப்பும் தேவையாகும்! கோபத்தை விலக்கினால்தான் குடும்பத்தில் அமைதி கூடும்! தீபத்தில் குருவைக் கண்டு தரிசித்தால் நன்மை சேரும்! என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.**

இந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, ஆறாமிடத்தில் சஞ்சரிக்கம் குருவால் ஆற்றல்கள் பளிச்சிடப் போகின்றன.

கூட்டு முயற்சியில் மாற்றங்கள் ஏற்பட்டு, தனித்தியங்கும் சூழ்நிலை உருவாகலாம். கொள்கைப் பிறப்பை ஒரு சில சமயங்களில் தளர்த்திக் கொள்ள நேரிடும். குடும்பத்தில் உள்ள பெரியவர்களை அனுசரித்தும், அவர்கள் ஆலோசனைகளைக் கேட்டும் நடந்தால், உங்கள் எண்ணங்கள் நிறைவேறும்.

ரோக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு ஆதிபத்ய அடிப்படையில் பார்க்கும்பொழுது, உங்கள் குடும்பத்தினர்களில் யாரேனும் ஒருவருக்கு ஆரோக்கிய பாதிப்பும் அதனால் சிறுசிறு விரயங்களையும், கொடுக்கும் சூழ்நிலை உருவாகலாம். உத்தியோகத்தில் எதிர்பார்த்தபடியே சலுகைகள் கிடைக்க மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டியது அவசியமாகும். எந்தச் செயலையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்வதன் மூலம், யோகங்களை வரவழைத்துக் கொள்ளலாம்.

பஞ்சம ஸ்தானாதிபதியாகவும் குரு விளங்குவதால், பிள்ளைகளின் உத்தியோக நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். அவர்களின் கல்யாணம் மற்றும் கடல் தாண்டும் முயற்சிகளுக்கு செலவிட்டு மகிழ்வீர்கள். பெண் குழந்தைகளின் சுபச்சடங்குகள், பிரியமுள்ள உறவினர்களின் இல்ல விழாக்களை எல்லாம் முன்நின்று நடத்துவீர்கள்.

### விதியை மாற்றும் வியாழன் பார்வை!

"குரு பார்க்க கோடி நன்மை" என்றும் "குரு சேர்ந்தால் கோடி நன்மை" என்றும் பழமொழி சொல்வார்கள். பொன்னவன் குருவின் பார்வை பதிந்தால் சாதாரண மனிதன் கூட சக்கரவர்த்தியாக மாறலாம். வீட்டில் இருப்பவர்களும் வேந்தர்களைப்போல மாறலாம். அரியணை ஏறும் யோகம் முதல் அன்றாட வாழ்க்கையை நன்றாக அமைத்துக் கொடுப்பது வரை குருவின் கையில் தான் இருக்கிறது.

அந்த குரு உங்கள் இராசிக்கு 2, 10,12 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார். அந்த குருவின் பார்வை பதியும் இடமாக இருக்கும் தனம், வாக்கு, குடும்பம் என்னும் இடம் வலுவடைவதால், நீங்கள் கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலும். கொள்கைப் பிடிப்பு இருந்தும், அதைச் செயற்படுத்த முடியவில்லையே என்ற கவலை இனி அகலும். திணறடித்துக் கொண்டிருந்த பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்கும் விதத்தில் கைக்குப் பணம் வந்து கொண்டே இருக்கும்.

குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். உயர்ந்த மனிதர்களின் நட்பும், ஆதரவும் கிடைக்கும்.

குருவின் பார்வை பலன் 10ஆவது இடத்தில் பதிவதால், செயல் ஸ்தானம் பலம் பெறுகிறது. செய்யும் செயல்களில் இருந்த சிக்கல்கள் அகலும். சிறுசிறு பிரச்சினைகள் குடும்பத்தில் தலை தூக்கினாலும், அதைச் சமாளித்து விடுவீர்கள். விலை உயர்ந்த பொருட்களை கையாளுவதில் கவனம் தேவை. குழந்தைகளின் கல்வி நலன்கருதி எடுத்த முயற்சியில் எதிர்பார்த்த அளவு வெற்றி கிடைக்குமா என்பது சந்தேகம்தான். புதிய தொழில் கூட்டாளிகள் வந்திணையும் வாய்ப்பு உண்டு.

குருவின் பார்வை அயன சயன ஸ்தானம் எனப்படும் 12ஆம் இடத்தில் பதிவதால் பயணங்கள் அதிகரிக்கும். தொழில் அதிபர்களாக இருப்பவர்கள் இன்று இத்தாலி, நாளை நோர்வே, நாளை மறுநாள் மொஸ்கோ என்று சுற்றிக் கொண்டே இருப்பீர்கள். அலைச்சல் கூடும் இந்த நேரத்தில் ஆதாயமும் கிடைக்கும். நீண்டதூரப் பயணங்களை ஒருசிலர் மேற்கொள்வர். பால்ய நண்பர்களின் உதவியால் புது முயற்சியொன்று கைகூடும்.

மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கவலைகள் மாறும். கோவில் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். அஞ்சல் வழியில் வரும் செய்தி ஆச்சரியப்பட வைக்கும். எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள். நடக்கும் தொழிலை விட்டு விட்டு, வேறு தொழிலை நாடிச் செல்வீர்கள். வீடு மாற்றங்கள் தானாகவே வந்து சேரலாம். வேற்று மனிதர்களின் ஒத்துழைப்போடு வியக்குமளவு முன்னேற்றம் காண்பீர்கள்.

### அக்கறை காட்ட வேண்டிய வக்ர காலம்!

மேட இராசியில் சஞ்சரிக்கும் குரு 18.08.2011 முதல் 15.12.2011 வரை வக்ர இயக்கத்தில் இருக்கிறார். 2,5 ஆகிய இடங்களுக்கு அதிபதி வக்ர கதியில் இருப்பதால், வரவைக் காட்டிலும் செலவு கூடலாம். தனவரவு தாராளமாக வந்தாலும், உடனுக்குடன் செலவாகி விடும். குடும்பச் செலவு கூடும் இந்த நேரத்தில் வீட்டுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்கள் முதல் ஆடம்பர பொருட்கள் வரை வாங்குவதில் ஆசைகள் உருவாகும்.

தங்கம், வெள்ளி போன்றவைகளை வாங்கிச் சேர்க்கும் எண்ணம் மேலோங்கும். பழைய வாகனங்களை பழுது பார்ப்பதைக் காட்டிலும் புதிய வாகனங்கள் வாங்கலாமா என்ற சிந்தனைகள் வரும். அவ்வாறு வாங்க நினைத்தவர்கள் அதிர்ஷ்ட எண்ணின் ஆதிக்கத்தில் வாங்குவது நல்லது. குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி எடுக்கும் முயற்சிகளுக்கு மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்புச் செய்வார்கள். இக்காலம் பொற்காலமாக இருக்க, மனித தெய்வ வழிபாடுகளையும், முன்னோர் வழிபாடுகளையும் மேற்கொள்வது நல்லது. அதோடு, மகத்தான குருவழிபாடும் செய்வது உத்தமம்.

**விருச்சிக இராசிப் பெண்களுக்கு**

**விருப்பங்கள் எல்லாம் நிறைவேறும்! வியக்கும் விதத்தில் வாழ்வமையும்!**

இந்த குருப்பெயர்ச்சி நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறுவதற்கான வாய்ப்புக்களைக் கொடுக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். கணவன்-மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். வக்ரகாலத்தில் மட்டும் வழிபாடுகளை முறையாக மேற்கொள்வது நல்லது. நந்தி வழிபாடு உங்களுக்கு நலங்கள் அனைத்தையும் வழங்கும். ஓகஸ்ட் மாதத்திற்கு மேல் சொத்துக்கள் வாங்கும் அமைப்பும் பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் நடைபெறும் அமைப்பும் உருவாகும். திசைமாறிய தென்முகக்கடவுள் வழிபாடும், தெசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடும் உங்களுக்கு தித்திக்கும் விதத்தில் வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொடுக்கும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு**

பௌர்ணமி தோறும் கிரிவலம் வந்து விநாயகப் பெருமான், முருகப் பெருமான், சிவபெருமான் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. அற்புதமான பலன்கள் வந்து சேரும்.

**சிவல்புரி சிங்காரம்**

(தொடரும்)





யாழ். கல்வி வலயு முதன்மை நிலை தரம் 3,4 வகுப்புக்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலர்மர்வு நேற்று முன்தினம் யாழ். கல்வி வலய ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெற்றது. இதில் ஆரம்ப கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பு. குகதாசன் செயலமர்வு நடத்துவதையும் அருகில் வளவாளர்கள் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்ட ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:- என்.குமார்)*

ஐ.நா. நிகழ்வில் விமல்

# சமரசத்தின் வெளிப்பாடு என்கிறது இன்னர் சிற்றி

2600ஆவது சம்புத்தத்வ ஜெயந்தியை முன்னிட்டு நியூயோர்க் கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச் செயலகத்தில் இடம் பெற்ற நிகழ்வில் ஐ.நாவை கடுமையாக விமர்சித்து வரும் அமைச்சர் விமல் வீரவன்ச கலந்துகொண்டமை கொழும்பின் சமரசத்தன் மையை வெளிக்காட்டியுள்ளதாக இன்னர் சிற்றி பிரஸ் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்கூட்டத்தில் கடந்த திங்கட் கிழமை கலந்துகொண்ட அமைச்சர் விமல் வீரவன்ச ஐ.நாவின் துணை பொதுச்செயலாளர் கியோடாக அகாசகா மற்றும் பல ஐ.நா. உயரதிகாரிகளுடன் கை குலுக்கியதாக இன்னர் சிற்றி பிரஸ் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனும் கலந்துகொண்ட இந்நிகழ்வில் விமல் வீரவன்ச உரையாற்றியமை தொடர்பில் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் மார்ட்டீன் நெசர்கி மிகக் குறைந்த அளவிலான கருத்துக்களையே வெளியிட்டதாகவும் இன்னர் சிற்றி பிரஸில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் விமல் வீரவன்சவைத் தொடர்பு கொண்ட இன்னர் சிற்றி பிரஸ் ஊடகவியலாளர், ஐ.நாவிற்கான இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி சவேந்திர சில்வாவின் மொழிபெயர்ப்பு உதவியுடன் விமல் வீரவன்சவிடம் கேள்விகளை எழுப்பினார்.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு எதிராகச் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்ட அமைச்சர் விமல் வீரவன்ச தற்போது இந்நிகழ்விற்கு விஜயம் செய்தமை குறித்து இன்னர் சிற்றி ஊடகவியலாளரால் கேள்வி எழுப்பப்பட்டது.

சிறிதொரு மௌன இடைவெளியின் பின்னர் விமல் வீரவன்சவின் பதிலினை மொழி பெயர்த்த சவேந்திர சில்வா, ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் ஒரு நாட்டின் பிரதிநிதி என்ற வகையில் இந்த பௌத்த நிகழ்வில் கலந்து கொள்வதில் விமல் வீரவன்ச பெருமையடைவதாக தெரிவித்தார் என அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# கறுப்பு நிறமாகும் கடல்நீர் அச்சத்தில் காலி மக்கள்!

(கொழும்பு)

காலிப்பகுதியில் கடல் நீர் கறுப்பு நிறத்திற்கு மாற்றமடைந்துள்ளதுடன் ஜப்பான் அணுக்கழிவுகள் கடலில் கொட்டப்பட்டதன் தாக்கமாக அது இருக்கலாம் என்ற அச்சம் பரவலாகத் தோன்றியுள்ளது. காலியின் களுவெல்ல பிரதேசத்திலேயே பிரஸ்தாப கடல்நீர் கறுப்பு நிறத்திற்கு மாற்றமடைந்துள்ள சம்பவம் அவதானிக்கப்பட்டுள்ளது.

கறுப்பு நிறமான கடல்நீருடன் எண்ணெய்த் தன்மையான ஒரு வகைப் படிவும் நீரில் அடித்து வரப்பட்டு கரையொதுங்கும் காரணத்தால் களுவெல்ல பிரதேச கடற்கரையோரம் கடுமையாக மாசடைந்து காணப்படுகின்றது.

விடயமறிந்து ஸ்தலத்திற்குச் சென்ற சமுத்திரவியல் மாசு கட்டுப்பாட்டுத் திணைக்கள அதிகாரிகள் கடல்நீரின் கருமைக்கு அதனோடு சேர்ந்து கரையொதுங்கும் மாசுகளும் எண்ணெய் அல்லது ஏதாவது இரசாயனம் காரணமாக இருக்கலாம் என்று கருத்து வெளியிட்டுள்ளனர்.


ஆயினும் ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பத்தையடுத்து கடலில் கொட்டப்பட்ட அணுக்கழிவுகள்தான் இவ்வாறு காலியில் கரையொதுங்குவதாக அப்பகுதி மக்களிடையே பரவலான அச்சம் தொற்றிக் கொண்டுள்ளது.

களுவெல்ல பிரதேசத்தின் கடற்பரப்பில் சுமார் ஒரு ஏக்கர் வரையான பரப்பளவில் பிரஸ்தாப மாசுப் படிவு பரந்து காணப்படுகின்றது. (ச-5)

# அங்கத்துவ நாடுகளை பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை தவறியுள்ளது

## அமைச்சர் விமல் குற்றச்சாட்டு

(கொழும்பு)



ஐ.நா. சபையானது தனது அங்கத்துவ நாடுகளைப் பாதுகாக்கும் விடயத்தில் கடமை தவறியுள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார்.

நியூயோர்க்கில் ஐ.நா. தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற புத்த ஜெயந்திக் கொண்டாட்டங்களின் பிரதம பேச்சாளராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டியுள்ளார்.

அதன்போது ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் , ஐ.நா.வுக்கான பல நாடுகளின் தூதுவர்கள் மற்றும் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி கலாநிதி பாலித கோஹன, துணை நிரந்தரப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்டோரும் கலந்து கொண்டிருந்தனர்.

ஏனைய அமைப்புக்களை விட ஐ.நா. சபையின் பொறுப்புக்கள் பாரியது.அது தனது அங்கத்துவ நாடுகளின் உரிமைகளைப் பாதுகாக் கும் விடயத்துக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் விமல் வீரவன்ச மேலும் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# மருதங்கேணி, செம்பியன்பற்றிலுள்ள முன்பள்ளிகள் திறக்கப்படவுள்ளன

பருத்தித்துறை பிரதேச சபைக்குக்குட்பட்ட செம்பியன்பற்று உப அலுவலக ஆளுகைக்குட்பட்ட மருதங்கேணி வடக்கு மற்றும் செம்பியன்பற்று வடக்கு ஆகிய இடங்களிலுள்ள முன்பள்ளிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி திறக்கப்படவுள்ளதாக பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதில் மருதங்கேணி வடக்கு முன்பள்ளி அன்று காலை 9 மணிக்கும் செம்பியன்பற்று வடக்கு முன்பள்ளி அன்றுகாலை 11 மணிக்கும் திறக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின் தலைவராக பருத்தித்துறை பிரதேச செயலாளர் சோ. ஜெயவசீகரன், பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி. பாரளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் சிறப்பு விருந்தினராக யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், வடமராட்சி உதவி அரசாங்க அதிபர் ந. திருலிங்கநாதன், வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் சி.தில்லைநாதன், கௌரவ விருந்தினராக வடமராட்சி கிழக்கு முன்பள்ளி இணைப்பாளர் சி. குணலட்சுமி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-64)




★ *1535-* பிரெஞ்சு நாடுகாண் பயணி ஜாக் கார்ட்டியே வட அமெரிக்கா நோக்கிய தனது இரண்டாவது பயணத்தை 110 பேருடன் மூன்று கப்பல்களில் ஆரம்பித்தார்.

★ *1604-* கனடாவின் மொன்ட்றியால் நகரம் அமைக்கப்பட்டது.

★ *1649-* இங்கிலாந்தை பொதுநலவாய நாடக அங்கீகரிக்கும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. அடுத்த பதினொரு ஆண்டுகளுக்கு இங்கிலாந்து குடியரசாக இருந்தது.

★ *1848-* மெக்சிக்கோ -அமெரிக்கப் போர்: கலிபோர்னியா, நெவாடா, யூட்டா மற்றும் பல பகுதிகளை ஐக்கிய அமெரிக்காவுக்கு 15 மில்லியன் டொலர்களுக்குக் கொடுக்க மெக்சிக்கோ முன் வந்ததை அடுத்து போர் முடிவுக்கு வந்தது.

★ *1897-* ஐரிய எழுத்தாளர் ஆஸ்கார் வைல்டு இங்கிலாந்தின் ரெடிங் சிறையில் இருந்து விடுதலை பெற்றார்.

★ *1961-* சோவியத்தின் வெனேரா 1 வீனஸ் கோளைத் தாண்டி வேறொரு கோளைத் தாண்டிய முதலாவது விண்ணூர்தி ஆனது.

★ *1971-* சோவியத் ஒன்றியம் மார்ஸ் 2 விண்கலத்தை ஏவியது.

★ *1978-* விடுதலைப் புலிகள் மீதான தடை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசினால் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது.

★ *1991-* அனைத்து மக்கள் வாக்கெடுப்பில் குரொவேசியர்கள் தமது விடுதலைக்காக வாக்களித்தனர்.

**பிறப்புக்கள்**

★ *1762-* யோஃகான் ஃபிக்டே, ஜேர்மனிய மெய்யியல் அறிஞர் (இ.1814)

★ *1882-* மொஹம்மது மொஸாடெக், ஈரானியத் தேசிய இயக்கத்தின் தலைவர்

★ *1890-* ஹோ ஷி மின், வியட்நாமியத் தலைவர் (இ. 1969)

★ *1925-* மால்கம எக்ஸ் அமெரிக்க மனித உரிமைச் செயற்பாட்டாளர் (இ.1965)

★ *1976-* கெவின் கார்னெட், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

**இறப்புக்கள்**

★ *1904-* ஜாம் செட்ஜி டாடா, இந்தியாவின் நவீன தொழில்துறையின் முன்னோடி (பி. 1839)

★ *2007-* ஜோதி, தமிழ்த் திரைப்பட நடிகை

# புராதன தொழில் நுட்பம்



## ஆன்மீகம் 21

கேள்வி: தியானலிங்கக் கோவிலைப்பற்றி எங்களுக்குச் சொல்ல முடியமா? (இக்கேள்விக்கான நேற்றைய பதிலின் தொடர்ச்சி கீழே)

...இதை எப்படி உருவாக்குவது என்பதற்கு ஒரு முழு விஞ்ஞானமே உள்ளது.இதை உருவாக்குவதற்கான ஆழமான புரிதலும் பயிற்சியும் இந்தக் கலாசாரத்தில் ஏற்கனவே இருந்திருக்கிறது.ஆனால் பக்தி மார்கம் இந்த தேசத்தில் வந்தபோது இவை அனைத்தும் துடைத்தெடுக்கப்பட்டு விட்டது. முற்காலத்தில் கோவில்கள் எல்லாம் ஒரு விஞ்ஞானரிதியாக கட்டப்பட்டன. அங்கே சென்று சிறிது நேரம் அமர்ந்திருந்து அந்த இடத்தை நீங்கள் பயன்படுத்திக்கொள்ள முடியும். இந்தியாவில் உள்ள கோவில்கள் எல்லாம் வழிபாட்டுக்காக பிரார்த்தனைக்காக உருவாக்கப்படவில்லை. அங்கே சிறிதுநேரம் நீங்கள் அமர்ந்திருக்க வேண்டும்.இதைப்பற்றி உங்களுக்கு சொல்லியிருக்கிறார்களா? பாரம்பரியமாக நீங்கள் கோவிலுக்குச் செல்லும்போது அங்கே சிறிதுநேரம் அமர்ந்திருக்கவேண்டும்.ஏனென்றால் கோவில் வடிவமைந்திருக்கும் விதமும் கோவிலில் உள்ள கடவுள் சிலையின் உருவமும் அதன் அமைப்பும் அதன் அளவும் அந்த சிலை மீது செதுக்கப்பட்டிருக்கும் முத்ராவும் ஒருவிதமான அதிர்வுகளை உருவாக்குகின்றன. கருவறையின் அமைப்பும் சுற்றியுள்ள பராக்ரமாவின் வடிவமைப்பும் ஒரு சக்திவாய்ந்த ஸ்தலமாக அவற்றை உருவாக்குகின்றன.

எனவே காலையில் எழுந்தவுடன் நீங்கள் குளித்துவிட்டு கோயிலில் சிறிதுநேரம் அமர்ந்து விட்டுப் பின்னர் .நீங்கள் பணிகளுக்குச் செல்கிறீர்கள். ஏனென்றால் இது உங்களுடைய பற்றறியை சார்ஜ் செய்வதுபோல. அது மட்டுமல்ல, பாரம்பரியமாகவே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், ஆன்மீகப் பாதையில் இருக்கும்போது நீங்கள் தினமும் கோயிலுக்குச் செல்லத் தேவையில்லை. என்று சொல்லியிருக்கிறார்கள். கேள்விப்பட்டிருக் கிறீர்களா? மற்றவர்கள் தினமும் கோயிலுக்குச் செல்ல வேண்டும். ஆனால் ஆன்மீகப்பாதையில் இருக்கின்ற மனிதன் தினமும் கோயிலுக்குச் செல்ல வேண்டியதில்லை. ஏனென்றால், தாமாகவே தன்னை சார்ஜ் செய்து கொள்ளும் வழிமுறைகள் என்னவென்பது அவர்களுக்குத் தெரியும். உங்களுக்கு அந்த வழிமுறை தெரியாவிட்டால் கோயில் போன்ற இடங்களுக்குச் சென்று உங்களைச் சக்தியூட்டம் செய்து கொள்ள வேண்டும்.



ஆனால் பக்தர்கள் கோயிலைக் கட்டத்தொடங்கியபோது இது மாறி விட்டது. ஒரு பக்தருக்கு அறிவியலைப்பற்றி எந்த அக் கறையுமில்லை. அவர் தன்னுடைய உணர்ச்சிகளின் வேகத்தைக் கொண்டே வளர்ந்து கொண்டிருப்பார். அதுதான் அவர்களுக்கு எல்லாமே. எனவே அவர்கள் எப்படி விரும்பினார்களோ அப்படியே கோயிலைக் கட்டினார்கள். பக்தர் ஒரு காதலரைப் போல. அவர் விரும்புவதை எல்லாக் கடவுளுக்கும் செய்கிறார். எனவே அவர்கள் எப்படி விரும்பினார்களோ அப்படியே கோவிலையும் கட்டினார்கள். ஒரு சிறிய கல் இருந்தால்போதும், அவற்றை அவர்கள் அங்கே நட்டுவைத்து லிங்கம் என்பதாக வழிபட்டார்கள். இப்படி நிறையத் தோன்றிவிட்டன. இல்லாவிட்டால் மனிதனுடைய நல்வாழ்விற்கென முற்றிலும் வித்தியாசமான பரிமாணத்தில் உருவாக்கப்பட்ட விஞ்ஞானம் இது.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

(முற்றும்)

# திருகோணமலை கலை, இலக்கியமும் தேசியப்பார்வையும்

**02**

> “கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை”

தமிழில் எழுந்த ஆரம்ப நாவல்களான பிராதாப முதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம், ஆகிய நாவல்களைப்போலவே திருகோணமலையில் எழுந்த இவ்விரு நாவல்களும் சரித்திரச்சான்றுடைய பாத்திரங்களை கதை மாந்தர்களாகக்கொண்டு எழுந்துள்ளமையைக்காணலாம். கல்கி, அகிலன், சாண்டில்யன் போன்ற வல்லுனர்கள் சரித்திர நாவல்கள் எழுதுவதற்கு முன்பே திருகோண மலையைச் சேர்ந்த அறிஞர்கள் சரித்திரநாவல்களை எழுதியது ஆச்சரியம் தருகின்ற விடயமாகும். இவ்விரு நாவல்களும் எழுந்த காலத்திலிருந்து சுமார் 60 வருடகாலம் திருகோணமலையில் நாவல் இலக்கியம் எழுதுவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இந்த இடைவெளியை நிரப்பியவர் வ.அ. இராசரத்தினம் ஆவார். இவர் 1956ஆம் ஆண்டு எழுதிய “கொழுகொம்பு” என்ற நாவலே சுமார் 60 வருடங்களுக்குப்பின் திருமலையில் எழுந்ததாகக் கொள்ளப்படுகிறது.

திருகோணமலையில் நவீன தமிழ்க்கவிதை மரபொன்று முளைகொள்ளத் தொடங்கியமையை 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காணக்கூடியதாகவுள்ளது. இந்த முனைப்பிற்கு காரணமாக இருந்தவர்கள் பலர். அவர்களில் வே.அகிலேசபிள்ளை தி.த. கனகசுந்தரம் பிள்ளை தம்பையாப்பிள்ளை, தி.த. சரவணமுத்துப்பிள்ளை, அ.அழக்கக்கோன், மா.முத்துமாருப்புலவர், சட்டம்பிதம்பையா, சு. தம்பையாப் பிள்ளை போன்றோரைக் குறிப்பிடலாம்.

பாரதிகூறியதைப்போல நவீன தமிழ்க்கவிதை மரபொன்று சொல்புதிது, சுவைபுதிது, நவமான கவிதைகளாக அவை இருக்கவில்லைஎன்றே சொல்ல வேண்டும். அவை மரபுகளை படித்து வைத்துக்கொண்ட பாண்டித்தியம் மிக்க அறிஞர்களால் பாடப்பட்டவையாகவும், பழைய மரபுகள் மீது நம்பிக்கைகொண்டவர்களால் ஆக்கப்பட்டவையாகவும்அக்காலக் கவிதைகள் அமைந்தன.

மறுமலர்ச்சிக் கவிதை மரபொன்று சுதந்திரத்திற்குப்பின் குறிப்பாக, 1950ஆம் ஆண்டுக்குப்பின் கிண்ணியாவைச்சேர்ந்த அண்ணல் என்ற கவிஞரின் வருகையுடன்தான் தலை நீட்டத்தொடங்கியதை காணலாம். வடக்கில் நாவற்குழியூர் நடராஜன், அ.ந. கந்தசாமி சோ. நடராஜா மகாகவி போன்றவர்களின் காலப்பகுதியின் சமச்சீர்த்தன்மை கொண்ட கவிதைகளை நவீனபோக்குக்கு அமைவாக அண்ணல் எழுதத்தொடங்கினார். ஆனால் இவரது கவிதைகள் சமூகம் சார்ந்தவைாக அமைந்தன. அதேவேளை தர்மு சிவராமு என்ற இளைஞர் அக்காலப்பகுதியில் சற்று மாறுபட்ட வகையில் ஒருசில கவிதைகள் எழுதினார்.

கவிஞர் அண்ணலைத்தொடர்ந்தே சற்று காலம் தாமதித்து தீருகோணமலை கவிராயர், தாமரைத்தீவான், கழகப்புலவர்,பெ.பொ. சிவசேகரம், கவிஞர் ஈழவாணன் போன்றவர்களின் வருகை திருகோணமலையின் நவீன க்விதைக்கு வழஞ்சேர்க்கத்தொடங்கியது.

இதேவேளை சிறுகதைத் துறையின் போக்கை நுண்ணுவோமாயின் தமிழ்ச் சிறுகதை வ.வே.சு. ஐயர், புதுமைப்பித்தன் போன்ற மேதாவிகளின் வருகையினால் தமிழிற்கு அறிமுகமான வேளை ஈழத்தின் வடக்கே சி. வைத்திலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தன், சிவபாதசுந்தரம் போன்றோர் (1930ஆம் ஆண்டுக்குப்பின்) இவ்வடிவத்தை ஈழத்திற்கு அறிமுகம் செய்த போதிலும் அத்தகையதொரு முயற்சிகள் திருகோணமலையில் இதே காலப்பகுதியில் மேற்கொள்ளப்படவில்லையாயினும் 1950ஆம் ஆண்டிற்குப்பின் ஈழத்துச்சிறுகதை முன்னோடிகள் என்ற வகையில் செ. கணேசலிங்கன், டொம்னிக் ஜீவா, கே.டானியல், எஸ்.பி. நீர்வைப் பொன்னையன் குழுவோடு இணைந்து திருகோணமலையில் சிறுகதை முன்னோடியாகத்திகழ்கிறார் வ.அ.இராசரத்தினம் என்னும் பிதாமகன். இவரை திருமலையில் புதுமைப்பித்தன் என்று சொல்லக்கூடிய அளவிற்கு திருகோணமலையில் சிறுகதை வரலாறு இவரிடம் இருந்துதான் ஆரம்பமாகிறது. இவருக்குப்பின்புதான் தர்மு சிவராமு, ந.பரமேஸ்வரி, க.சா.அரியநாயகம், தி.அரியநாயகம், த.பி.சுப்பிரமணியம் போன்றோர் இத்துறைக்கு வளம் சேர்க்க வந்தார்கள்.

நவீன நாடக மரபுகள் சிறுகதைபோல் அல்லாமல் நாவல் துறைபோல் சற்று மாறுபட்ட முறையில் திருகோணமலையில் 19ஆம் நூற்றாண்டிலிருந்து வளர்ச்சியடைய ஆரம்பிக்கின்றது.

**திருமலை நவம்**

(தொடரும்)

# வடக்குக் கிழக்கில் மிக இரகசியமான முறையில் சிங்கள குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன

## மாவை எம்.பி. குற்றச்சாட்டு

(அம்பாறை)

**வடக்குக் கிழக்கில் அரசாங்கம் இரகசியமான முறையில் சிங்கள குடியேற்றங்களை மேற்கொண்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா குற்றஞ்சாட்டியுள்ளார்.**

ஒருபுறம் வடக்குக் கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு வருவதுடன் மறுபுறம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்தையில் ஈடுபட்டும் வருகின்றது. பேச்சுவார்த்தை சுமுகமாக நடைபெற வேண்டுமாயின் அரசாங்கம் உடனடியாக வடக்குக் கிழக்கில் தற்போது மேற்கொண்டு வரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை உடனடியாக நிறுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்த மாவை சேனாதிராசா நாவிதன்வெளி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போர் முடிந்து சகல இடங்களிலும் இராணுவம் பிரசன்னமாகியிருக்கும் இத்தருணத்தைப் பாவித்து அரசாங்கம் முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு வருகின்றது. அந்நிலை பொத்துவில் பிரதேசத்திலும் காணப்படுகின்றது. தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களில் இன்று இராணுவத்தின் உதவியுடன் அரசாங்கம் திட்டமிட்ட வகையில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறான நெருக்கடியான சூழ்நிலைகளை எதிர்கொண்டவாறே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகின்றது.

போர் காரணமாகத் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் அந்த இடங்களில் தற்போது சிங்களவர்கள் குடியேற்றப்பட்டிருக்கிறார்கள். இதனை நாம் ஆதாரபூர்வமாக ஊர்ஜிதப்படுத்தியிருக்கிறோம்.

பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என பேச்சுவார்த்தை நடாத்தும் அரசாங்கம் பிரச்சினையின் மூலகாரணமான திட்டமிட்ட குடியேற்றங்களைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களில் வெளியில் தெரியாத வகையில் மிக இரகசியமான முறையில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.



இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா பா.அரியநேத்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தோமஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(ஸ்ரீ-2)

## பல்கலைக்கழகங்களை தரமுயர்த்த 600 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களை சர்வதேச மட்டத்திற்குத் தரமுயர்த்துவதற்காக 600 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழகமொன்றின் தரமேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக தலா 100 மில்லியன் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்தர்ர்.

கொழும்பு, றுகுணு, மொரட்டுவ, ஜயவர்த்தனபுர, களனி, பேராதனை உள்ளிட்ட பல்கலைக்கழகங்களுக்காக இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக தனியார் துறையிடமிருந்தும் அபிவிருத்திக்கான உதவிகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

## தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு சுகாதாரத் தொண்டர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்த யாழ்.மாவட்ட கிராமிய சுகாதாரத் தொண்டர்கள் மற்றும் சுகாதாரத் தொண்டர்கள் தமக்கான நியமனம் குறித்து கலந்துரையாடினர்.

அமைச்சரின் யாழ்.அலுவலகத்தில் கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற இச்சந்திப்பின் போது யாழ்.மாவட்டத்தில் அந்தந்த பகுதிகளில் கடமையாற்றுகின்ற கிராமிய சுகாதாரத் தொண்டர்கள் மற்றும் சுகாதாரத் தொண்டர்கள் தமது நியமனம் தொடர்பான கோரிக்கையை முன்வைத்தனர்.

கோரிக்கையினை ஆராய்ந்த அமைச்சர் நிரந்தர நியமனம் கிடைக்கும் வரையில் ஊதியம் தொடர்பில் தற்காலிக ஏற்பாடு செய்யப்படும் எனவும் அதுவரையில் கால அவகாசம் தேவையெனவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரனும் கலந்துகொண்டார். (ஸ்ரீ-2)

## வைகாசிப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வருடாந்த வைகாசிப் பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடை பெறும்.

இதில் "தேவி பாகவதம்" என்னும் தொடர் சொற்பொழிவை சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் வழங்குவார்.

(ஸ்ரீ-2)

## கொள்கை ரீதியான வட்டிவீதங்களை பேணுவதற்கு மத்திய வங்கி தீர்மானம்

(கொழும்பு)

கொள்கை ரீதியிலான வட்டி வீதங்களை நடைமுறையிலுள்ள மட்டத்தில் தொடர்ந்தும் பேணுவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற மத்திய வங்கியின் நாணயச் சபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

தற்போதைய பொருளாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக நாணயச் சபை தெரிவித்துள்ளது.

இவ்வருடத்தின் முதற் காலாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் எதிர்பார்த்த மட்டத்தில் காணப்படுவதாக நாணயச் சபைக் கூட்டத்தின் பின்னர் இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள மாதாந்த கொள்கை மீளாய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமெரிக்க டொலர் மற்றும் இந்திய ரூபாய் ஆகியவற்றுக்கு எதிரான இலங்கை நாணயத்தின் பெறுமதி அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

இம்மாத மாதாந்த நாணயக் கொள்கை மீளாய்வு அறிக்கையின் பிரகாரம் அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி 1.08 வீதத்தினாலும் இந்திய ரூபாயிற்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி 1.2 வீதத்தினாலும் உயர்ந்துள்ளன.

எனினும் யூரோ, ஸ்ரேலிங் பவுண் மற்றும் ஜப்பான் ஜென் ஆகியவற்றுக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளதாக மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

## உடுவில் கோட்ட ஆங்கில தினப் போட்டிகள்

(சுன்னாகம்)

உடுவில் கோட்டமட்ட ஆங்கில தினப் போட்டிகள் எதிர்வரும் 30, 31 ஆகிய தினங்களில் உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

(ஸ்ரீ-54)







மட்டுவில் ஞானகுமாரனின் "சிறகு முளைத்த தீயாக" கவிதை நூல் அறிமுகவிழா அண்மையில் யாழ். ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் நூல் அறிமுகவுரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் மற்றும் பார்வையாளர்களையும் படங்களில் காணலாம்.

# லிபியாவில் நேட்டோ படைகள் ஓயாத குண்டு வீச்சு!!!

## இரு அமைச்சரகங்கள் தீக்கிரையாகின



(டிரிபோலி)

லிபியாவின் தலைநகர் டிரிபோலி மீதான நேட்டோ விமானப் படைகளின் குண்டு வீச்சு வலுத்துள்ளது. கடாபி குடியிருப்பு வளாகத்தின் அருகில் உள்ள இரு அமைச்சகங்கள் குண்டு வீச்சில் தீக்கிரையாகின.

இந்நிலையில் கடாபி அமைச்சரவையின் எண்ணெய் வளத்துறை அமைச்சர் தனது பதவியில் இருந்து விலகி எதிர்த்தரப்பில் சேர்ந்து கொண்டார்.

லிபியாவில் கடாபி இராணுவத்தின் தாக்குதலைத் தடுக்கும் வகையில் நேட்டோ தனது தாக்குதலை விரிவுபடுத்த வேண்டும் என்று சமீபத்தில் பிரிட்டன் கேட்டுக் கொண்டது.

இதையடுத்து கடந்த இரு நாட்களாக தலைநகர் டிரிபோலியின் பல பகுதிகளில் நேட்டோ விமானப் படைகள் குண்டுகளை வீசித் தாக்கி வருகின்றன.

இந்நிலையில் நேற்று முன்தினம் கடாபி குடியிருப்பு வளாகத்தின் அருகில் உள்ள ஊழல் தடுப்பு அமைச்ச கம் மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சகம் ஆகியவற்றின் மீது நேட்டோ குண்டுகளை வீசியதில் இரு அமைச்சகங்க ளும் தீக்கிரையாகின.

இச்சம்பவத்தில் ஊழியர்கள் சிலர் காயம் அடைந்ததாகத் தெரிவித்துள்ள லிபிய அரசு எதிர்த் தரப்புத்தான் நேட்டோவுக்குத் தவறான வழிகாட்டி வருவதாகக் குற்றம் சாட்டியுள்ளது.

இதற்கடையில் லிபியாவின் தேசிய எண்ணெய் வளத்துறை அமைச்சர் ஷாக்ரி கனீம் (68) நேற்று முன்தினம் தனது பதவியில் இருந்து விலகி எதிர் தரப்பில் சேர்ந்து விட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவில் படித்த இவர் எண்ணெய் வளக் கூட்டமைப்பு நாடுகளின் (ஓபெக்) கூட்டத்தில் லிபியா சார்பில் கலந்து கொண்டவர். அவர் தற்போது எங்கிருக்கிறார் எனத் தெரியவில்லை என்று எதிர்த் தரப்பு தெரிவித்துள்ளது. அவர் துனிசியாவிற்குச் சென்றிருக்கக் கூடும் என்று தகவல்கள் கூறுகின்றன.

அதேநேரம் ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் நேற்று முன்தினம் லிபிய அரசின் பிரதிநிதிகளுடன் ரஷ்ய அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். அதைத் தொடர்ந்து பெங்காசியில் உள்ள எதிர்த் தரப்பு பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். (ஸ்ரீ)

## அல்கொய்தா இயக்கத்தின் முக்கிய தளபதி கைது


பின்லேடன் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்கு நெருக்கடி ஏற்பட்டு இருப்பதால் பாகிஸ்தான் அரசு அல்கொய்தா இயக்கத்தினரின் செயற்பாடுகளை ஒடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு உள்ளது.

இந்த நிலையில், பாகிஸ்தானின் தென் பகுதியில் உள்ள கராச்சி நகரில் அல்கொய்தா இயக்கத்தைச் சேர்ந்த முக்கிய தளபதி ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரது பெயர் முகமது அலி காவிம் யாகூப் என்ற அபு சோகைப் அல்-மக்கி. ஏமன் நாட்டைச் சேர்ந்த இவர்,பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டதாக பாகிஸ்தான் இராணுவம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது. பாகிஸ்தான்- ஆப்கானிஸ்தான் எல்லைப்பகுதியில் உள்ள அல்கொய்தா இயக்க தலைவர்களுடன் அல்-மக்கி இணைந்து செயற்பட்டு வந்ததாகவும், அவர் கைது செய்யப்பட்டதன் மூலம் அல்கொ ய்தா இயக்கத்தின் செயற்பாடுகள் பற்றிய விசாரணையில் முக்கிய முன்னேற்றம் ஏற் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)




## தனது சொத்துக்கள் முழுவதையும் தாரைவார்க்க முபாரக் முடிவு

(கெய்ரோ)



மக்களுக்கு ர ான் எந்தத் தீங்கு செய்திருந்தாலும் என்னை மன்னிக்க வேண்டும். என் சொத்துக்கள் முழுவதையும் நாட்டிற்குத் தந்து விடுகிறேன் என எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் (83) அந்நாட்டின் இராணுவ ஆட்சியாளரிடம் கோரியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எகிப்து ஜனாதிபதியாக முபாரக் இருந்த போது அவரும், அவரது குடும்பத்தாரும் சட்டவிரோதமாக கோடிக்கணக்கில் சம்பாதித்தனர். மக்கள் புரட்சிக்குப பின், அவர் மீதான பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் முபாரக், அவரதுமனைவி சூசன்னே முபாரக்,அவரது மகன்கள் கமால் மற்றும் அலா ஆகிய நான்கு பேரும் கைது செய்யப்பட்டு வருகின்றனர். அவர்களில் முபாரக்கும் அவரது மனைவியும், சினாய் தீபகற்பத்தில் உள்ள ஷரம் எல் ஷேக் என்ற நகரில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், இதுவரை மக்களுக்கு நான் செய்த தீங்குகளுக்கு என் அதிகாரிகள் எனக்குத் தந்த தவறான தகவல்களே காரணம். நான் பொறுப்பல்ல: அதனால் எனக்குப் பொது மன்னிப்பு வழங்க வேண்டும். அதற்கு ஈடாக என் சொத்துக்கள் அனைத்தையும் நாட்டுக்குத் தந்து விடுகிறேன் என்று இராணுவ ஆட்சியாளரிடம் முபாரக் கோரியிருப்பதாக தகவல்கள் வந்துள்ளன. அதேநேரம் சமீபத்தில் கைதாகி, தற்போது சிகிச்சை பெற்று வரும் முபாரக்கின் மனைவி சூசன்னே முபாரக்கும் தனது சொத்துக்களை நாட்டுக்கு தந்து விடுவதாகக் கூறியுள்ளார்.

முபாரக் ஆட்சியில் ஊழலில் திளைத்த அமைச்சர்கள் பலர் மீதான குற்றச்சாட்டுக்கள், மளமளவென விசாரிக்கப்பட்டு அவர்களுக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டு வருகின்றது. முபாரக்கின் மீதான ஊழல் மற்றும் மக்கள் புரட்சியின் போது பொலிஸாரை ஏவி மக்களைக் கொன்றது ஆகிய குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை கிடைக்கும் என்று கூறப்படுகிறது. இதில் இருந்து தப்பிப்பதற்கே, முபாரக் இதுபோன்று நாடகம் ஆடுகிறார் என்ற கருத்து தற்போது எகிப்தில் பரவலாகக் காணப்படுகிறது. பொது மன்னிப்பு குறித்த முபாரக்கின் கடிதங்கள் விரைவில் வெளியாகும் எனவும் தகவல்கள் கூறுகின்றன. பொது மன்னிப்பு வழங்கப்பட்டால் அவருக்கும் அவரது மனைவிக்கும் மட்டுமே கிடைக்கும் எனவும் அவரது மகன்கள் இருவருக்கும் கிடைக்க வாய்ப்பில்லை எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ)



எகிப்தில் 3 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த (கி.மு. 1550) மன்னர் ஒருவரின் மம்மி (சடலம்) ஒன்று கெய்ரோ அருங்காட்சியகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த மம்மியினை அந்நாட்டு மருத்துவக் குழு ஒன்று தற்கால மருத்துவத்தின்படி சி.ரி. ஸ்கான் மூலம் மம்மியின் இதய செயற்பாட்டை ஆராய்ந்து அறிக்கை அளித்துள்ளது. இதில் அக்காலத்தில் பலர் இதய நோயினால் இறந்துள்ளமை தெரியவந்துள்ளது.

## இன அழிப்பு மேற்கொண்டமைக்காக ருவண்டா இராணுவத் தளபதிக்கு முப்பது வருட சிறை



இனவழிப்பு குற்றச்சாட்டிற்காக ருவண்டாவின் முன்னாள் இராணுவத் தளபதிக்கு 30 ஆண்டு கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ருவண்டாவின் முன்னாள் இராணுவத் தளபதி ஒகஸ்டின் பிஸிமுன்கு என்பவருக்கு இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு ருவண்டாவில் இடம்பெற்ற இன அழிப்பு சம்பவங்களில் முன்னாள் இராணுவத் தளபதிக்கு தொடர்பு இருப்பதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது. மேலும் இரண்டு உயர் இராணுவ அதிகாரிகளுக்கு தலா இருபது ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டில் சுமார் 8 இலட்சம் இன மக்களும், மிதவாத கொள்கையுடைய ஹூட்டு இனத்தவர்களும் நூறு நாட்களில் படுகொலை செய்யப்பட்டனர். ருவண்டாவிற்கான சர்வதேச குற்றவியல் நீதிமன்றினால் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு முன்னாள் இராணுவத்தளபதி ஒகஸ்டின் பிஸிமுன்கு அங்கோலாவில் வைத்து கைது செய்யப்பட்டார். ருவண்டாவின் முன்னாள் பொலிஸ் பொறுப்பதிகாரி அகஸ்டின் நிடின்லிமியாவிற்கும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தண்டனை விதித்து விடுதலை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

டுட்டு இனத்தவரை படுகொலை செய்யுமாறு இராணுவத்தளபதி ஒகஸ்டின் பிஸிமுன்கு உத்தரவிட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

## ஓசாமா பின்லேடனுக்கு உதவிய குற்றச்சாட்டில் அண்ணன், தம்பி கைது

பாகிஸ்தானில் உள்ள அபோதாபாத்தில் ஒரு வீட்டில் பதுங்கியிருந்த பின்லேடன் அமெரிக்க இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவருடன், அந்த வீட்டின் உரிமையாளர்கள் அர்சத்கான்,தாரிக்கான் ஆகியோரும் உயிரிழந்தனர்.

பின்லேடன் கொல்லப்பட்டதையடுத்து அவருடன் தொடர்பு வைத்திருந்தவர்களையும் பாகிஸ்தான் அரசு கைது செய்து வருகிறது. இந்நிலையில் கைபர்- பக்துன்சவா மாகாணத்தின் ஷாங்லா மாவட்டத்தில் மார்டஸ் அருகே உள்ள கோட் காய் என்ற கிராமத்தை சேர்ந்த அண்ணன்,தம்பி கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களது பெயர் ஷியா உல்ஹக்(24), மற்றும் ரசூல்ஹசன் (22). இவர்கள் வீட்டின் உரிமையாளர்கள் அர்ஷத்கான், தாரிக்கான் ஆகியோர் மூலம் பின்லேடனுக்கு உதவி வந்தனர்.

இவர்கள் 2 பேரும் பல ஆண்டுகளாக குவைத்தில் தங்கியிருந்தனர். சமீபத்தில் தான் இவர்கள் பாகிஸ்தான் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# இலங்கை அரசை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்




## ஜெயலலிதாவிடம் சீமான் கோரிக்கை

(சென்னை)

இலங்கை அரசை சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்த சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென புதிதாகப் பதவியேற்றுக் கொண்ட தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவிடம் நாம் தமிழர் இயக்கம் கோரிக்கை விடுக்கும் என்று அதன் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

இது குறித்து செய்தியாளர்களுக்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் போர் முடிவுக்கு வந்து இரண்டு வருடங்கள் முடிவடைகின்றது. இந்நிலையில் அ.தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டதைப் போல இலங்கை அரசை கைது செய்து சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்த சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.



இதற்கான கோரிக்கையை முதல்வர் ஜெயலலிதாவிடம் நாம் தமிழர் இயக்கத்தின் சார்பில் முன்வைக்கவுள்ளோம். (ஸ்ரீ-2)

## தனது குடும்பத்திற்கு பாதுகாப்பு வழங்கக் கோரி வடிவேலு மனு

தே.மு.தி.கவினர் மிரட்டுவதால் தனது குடும்பத்திற்குப் பாதுகாப்புத் தேவை என தமிழக டி.ஜி.பியிடம் நடிகர் வடிவேலு சார்பில் மனு அளிக்கப்பட்டுள்ளது.

நடிகர் வடிவேலு சார்பில் அவரது வழக்கறிஞர் சரவணன், டி.ஜி.பி. லத்திகாசரணிடம் கொடுத்த மனுவில் கூறப்பட்டிருப்பதாவது,

நான் கடந்த 20 ஆண்டுகளாக தமிழக திரைப்படத்துறையில் நகைச்சுவை நடிகராக நடித்து வருகின்றேன்.

தமிழகத்தில் நடைபெற்ற சட்டபேரவைத் தேர்தலில் தி.மு.க.வுக்கு ஆதரவாக பிரசாரம் செய்தேன். குறிப்பாக தே.மு.தி.க.வை எதிர்த்துப் பிரசாரம் செய்தேன். இதனால் அந்தக் கட்சியினரும் அந்தக் கட்சியின் தலைவர் விஜயகாந்தும் என் மீது கோபமாக இருந்து வருகின்றனர்.

இதற்கிடையே தே.மு.தி.க. தலைவர் விஜயகாந் தூண்டுதலின்பேரில் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து எனக்கும் எனது குடும்பத்திற்கும் தொடர்ச்சியாக மிரட்டல் விடுக்கப்பட்டு வருகிறது. எனவே எனக்கும் எனது குடும்பத்திற்கும் ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால் தே.மு.தி.க.வினரே காரணம் என்றுள்ளது. (ஸ்ரீ-2)

# நடிகர் ரஜினிகாந்தின் உடல்நிலையில் முன்னேற்றம்

(போரூர்)

நடிகர் ரஜினிகாந்த் உடல் நிலை திருப்திகரமாக இருக்கிறது. அவரது உடலின் அனைத்துப் பாகங்களும் சீராக இயங்கி வருகிறது. மருத்துவமனையில் தனது குடும்பத்துடன் அவர் பொழுதை கழித்து வருகிறார் என்று அவர் சிகிச்சை பெற்று வரும் இராமச்சந்திரா மருத்துவமனை நிர்வாகம் அறிவித்துள்ளது.

நடிகர் ரஜினிகாந்த் உடல் நிலை பாதிப்பு காரணமாக கடந்த 13 ஆம் திகதி இரவு போரூர் ஸ்ரீ இராமச்சந்திரா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். வைத்தியசாலையின் ஏழாவது மாடியில் வி.ஐ.பி.க்களுக்கான தனி விடுதியில் சிகிச்சை பெற்று வருகிறார். மூச்சுக் குழாய் நோய் தொற்று காரணமாக அவருக்கு காய்ச்சல் இருப்பதாகவும் அதற்கான சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் தொற்று ஏற்படாமல் இருக்க அவர் பார்வையாளர் சந்திப்பைத் தவிர்க்க வேண்டும் என்று வைத்தியர்கள் கூறியிருந்தனர்.

இதைத் தொடர்ந்து கடந்த 16ஆம் திகதி இரவு முதல் ரஜினிகாந்தை பார்வையாளர்கள் சந்திப்பது தவிர்க்கப்பட்டது. நேற்று முன்தினம் காலை மேற்கொள்ளப்பட்ட வைத்திய பரிசோதனையில் ரஜினிகாந்திற்கு இரைப்பையில் அலர்ஜி இருப்பது கண்டறியப்பட்டது. அதற்குரிய மருந்துகள் கொடுக்கப்பட்டன. காய்ச்சல், சளி குறையவும் மருந்து கொடுக்கப்பட்டது. நுரையீரலில் நீர்கோர்ப்பு இருந்ததால் ரஜினி மூச்சுவிட சிரமப்பட்டார். இதையடுத்து நுரையீரலில் இருந்த நீர் சிகிச்சை மூலம் வெளியேற்றப்பட்டது.

இதன் பின் சுவாசிப்பது அவருக்கு எளிதாகியுள்ளது. அவர் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. தொடர்ந்து இரத்த பரிசோதனைகள் மூலம் உடல் பாக இயக்கம் குறித்து டாக்டர்கள் கண்காணித்து வருகின்றனர். ரஜினிகாந்த் உடல்நிலை குறித்து மருத்துவமனை நிர்வாகம் நேற்று முன்தினம் வெளியிட்ட ஒரு செய்திக்குறிப்பில் ரஜினிகாந்த் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. உடலில் இரத்த அழுத்தம் சீனியின் அளவு சீராக உள்ளது. மருத்துவமனையில் தனது குடும்பத்தினருடன் பொழுதை கழித்து வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# 2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேடு சுப்பிரமணியசாமி குற்றச்சாட்டு

(புதுடில்லி)

2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேட்டில் ஜனதா கட்சி தலைவர் சுப்பிரமணியசாமி தொடர்ந்து வழக்கு விசாரணை சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றில் நீதிபதி ஓ.பி.சைனி முன்னிலையில் நேற்று நடந்தது.

அப்போது சுப்பிரமணியசாமி நீதிமன்றில் கூறியதாவது,

2ஜி ஸ்பெக்ட்ரம் விகாரம் தொடர்பாக நான் கொடுத்த புகாரில் தேசிய பாதுகாப்பு குறித்த பல்வேறு அம்சங்களை தெரிவித்து இருந்தேன். எனது புகாரை சி.பி.ஐ. முதல் தகவல் அறிக்கையுடன் இணைக்க விரும்பவில்லை. எனவே, புகார் குறித்து தனியாக விசாரிக்க வேண்டும்.

இந்த வழக்கில் தேசிய பாதுகாப்பு குறித்து சி.பி.ஐ. விசாரிக்கவில்லை. 2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் அரசு சட்டத்தரணியாக என்னை நியமிக்க வேண்டும். இந்த விடயத்தில் எனக்கு எல்லா உரிமையும் உண்டு என அவர் கூறினார்.



அரச தரப்பு சட்டத்தரணியாக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு சி.பி.ஐ. தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஸ்ரீ-2)

# பாரதச் செய்திகள்



ம.தி.மு.க.வின் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் அக்கட்சியின் பொதுச் செயலர் வை.கோ. தலைமையில் சென்னை எழும்பூர் தாயகத்தில் நடைபெற்றது. இதில் வைகோ உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

# தமிழக முதலமைச்சர் புதுடில்லி விஜயம்

(சென்னை)

தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டதையடுத்து பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவி சோனியா மற்றும் முக்கிய அரசியல் தலைவர்களை சந்திப்பதற்காக ஜெயலலிதா டில்லிக்கு எப்போது வருகை தரவுள்ளார் என்ற பரபரப்புக் கிளம்பியுள்ளது.

தமிழக சட்டசபைத் தேர்தலில் யாருமே எதிர்பார்க்காத வகையில் மிக பிரமாண்டமான வெற்றியை அ.தி.மு.க. பெற்றது. இதனையடுத்து அக்கட்சியின் பொதுச் செயலர் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

நேற்று முன்தினம் சென்னையில் முதன் முறையாக அவரது அமைச்சரவையின் முதல் ஆலோசனைக் கூட்டமும் நடைபெற்றது. வழக்கமான சம்பிரதாயங்களையும் அதிரடிகளையும் முடித்துள்ள முதல்வர் ஜெயலலிதா எப்போது டில்லி வருவார் என்ற எதிர்பார்ப்பு கிளம்பியுள்ளது.

முதல்வராகப் பொறுப்பேற்றவுடன் சம்பிரதாய முறைப்படி டில்லிக்கு வந்து பிரதமர் உட்பட முக்கியஸ்தர்களைச் சந்தித்து பூங்கொத்து அளித்து மரியாதை நிமித்தமான சந்திப்பு நடப்பது வழக்கம்.

இம்முறை சட்டசபைத் தேர்தலில் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றவுடனேயே தாமதமே இல்லாமல் டில்லியில் உள்ள தலைவர்கள் பலரும் ஜெயலலிதாவைத் தொடர்பு கொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

பிரதமர் மன்மோகன் சிங் வாழ்த்து கூட வழக்கமான ஒன்றாக பார்க்கப்பட்டது. ஆனால் காங்கிரஸ் தலைவி சோனியா, தானே நேரடியாக ஜெயலலிதாவைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு தெரிவித்த வாழ்த்துத்தான் மிகப்பெரிய செய்தியாக ஆனது.

பிரதமரின் அழைப்பு என்பது வழக்கமான ஒன்று. ஆனால் சோனியாவின் அழைப்பு என்பது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே பார்க்கப்படுகிறது. தவிர, உள்துறை அமைச்சர் சிதம்பரத்தையும் இம்முறை ஜெயலலிதா சந்திக்கவுள்ளதால் அந்தச் சந்திப்பும் மிகுந்த எதிர்பார்ப்புக்குள்ளாகியுள்ளது. (ஸ்ரீ)

# மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தேடுதல் நடவடிக்கை

## மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் படையினரும் பொலிஸாரும் இணைந்து கடும் தேடுதல் நடவடிக்கைகளில் நேற்று முன்தினம் காலை முதல் ஈடுபட்டு வருகின்றனர்.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எருவில் குறுமண்வெளி ஆகிய பகுதிகளை நேற்றுக் காலை சுற்றி வளைத்த பொலிஸாரும்படையினரும்வீடுவீடாகச் சென்று சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அத்துடன் வீதிகளில் சென்ற வாகனங்கள் மறிக்கப்பட்டு சோதனைக்குட்படுத்தப்பட்டதுடன் வீதியால் சென்ற பொதுமக்களும் உடற் சோதனைனக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேபோன்று மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திமிலைதீவு பகுதி மற்றும் மட்டக்களப்பு திருமலை வீதியிலும் கடும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திமிலைதீவு பகுதியை சுற்றிவளைத்து பொலிஸாரும் படையினரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் சந்தேகத்திற்குரியவர்கள் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

இந்த தேடுதல் நடவடிக்கையில் இதுவரையில் எவரும் கைது செய்யப்பட்டனரா என்பது தொடர்பிலான விபரங்கள் எதனையும் பொலிஸார் இதுவரை தெரிவிக்கவில்லை.

இதேவேளை, ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செங்கலடி பிரதேசத்தில் உள்ள தமிழ் மக்கள் விடுதலைப்புலி ஆதரவாளரும் வர்த்தகருமான ஒருவரின் வீட்டுக்கு சென்ற விசேட குற்றப்புலனாய்வுத் துறையினர் கடும் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

கறுப்புத்துணியால் வாய்களை மூடிய நிலையில் சென்ற விசேட குற்றப்புலனாய்வுத் துறையினரே இந்தத் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர். குறித்த வர்த்தகரின் தியேட்டர் மற்றும் வீடு என்பனவற்றில் குறித்த குழுவினர் சுமார் இரண்டு மணித்தியாலமாக தேடுதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தேசிய அமைப்பாளரும் மாகாண சபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என்றழைக்கப்படும் எட்வின் கிருஸ்ணானந்தராசா கைது செய்யப்பட்டதை அடுத்தே இந்த தேடுதல்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# உடற்பயிற்சி போட்டி

(அல்வாய்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டி எதிர் வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வலய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளைத் தவறாது பங்குபற்றுமாறு வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளரும் யாழ். மாவட்ட விளையாட்டுக்குழு செயலாளருமான மு.நடராஜா அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-19)

# இந்தியாவிலிருந்து போலிக் கடவுச்சீட்டில் பிரான்ஸ் செல்ல முயன்ற யாழ்.இளைஞர் கைது

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் நோக்கி போலியான கடவுச்சீட்டில் செல்ல முற்பட்டபோது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜீவதாஸ் என்ற 30 வயதுடைய நபரே நெடும்பசேரியில் உள்ள கொச்சின் சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் சபரிமுத்து பீற்றர் என்ற பெயரில் தயார் செய்யப்பட்ட போலி கடவுச் சீட்டை கொண்டோஇந்தியாவை விட்டு வெளியேற முற்பட்டுள்ளார் என்று குடியகல்வு பொலிஸ் மேலதிகாரி கே.ஜே.ஜேம்ஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த 2007 ஆம் ஆண்டு திருச்சியில் உள்ள கடவுச்சீட்டு அலுவலகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. ஜீவதாஸ் என்ற குறித்த நபர் கடந்த 2003 ஆம் ஆண்டு இந்தியாவிற்கு வந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையினால் வழங்கப்பட்ட கடவுச்சீட்டு காலாவதியானதைத் தொடர்ந்து குறித்த நபர் சவாரி என்ற பெயரில் திருச்சியில் போலிக் கடவுச்சீட்டைப் பெற்றுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் விடுதலைப்புலி உறுப்பினராக அல்லது வேறு ஏதாவது பயங்கரவாத குழுவைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் நெடும்பசேரி பொலிஸ் நிலையத்திற்கு பாரப்படுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# தமிழக முதல்வருக்கு இலங்கை வாழ்த்துச் செய்தி

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா தமிழக முதலமைச்சராகி சில நாட்களுக்குள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் வாழ்த்துக் கடிதமொன்றை அனுப்பியதன்மூலம் அவருடன் இணக்கமான போக்கைக் கடைப்பிடிக்க இலங்கை விருப்பமாகவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் அவரது உதவியாளர்களையும் யுத்தக் குற்றம் இழைத்தமைக்காக சர்வதேச நீதி மன்றத்தில் விசாரணை செய்யவேண்டுமென ஜெயலலிதா கூறியுள்ள நிலையில் ஜீ.எல். பீரிஸின் நடவடிக்கை விசேட கவனத்தைப் பெறுகின்றது.

இலங்கை சார்பில் ஜீ.எல்.பீரிஸ் எழுதிய கடிதம் பாராட்டுக்கு அப்பாலும் சென்று இரண்டு நாட்டு மக்களின்நலனுக்காக இலங்கை ஜெயலலிதாவுடன் சேர்ந்து ஒத்துழைக்க விரும்புவதாகவும் கூறியுள்ளது.

தமிழ்நாட்டு மக்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் உணர்வுபூர்வமாக அக்கறைப்படுவதை விளங்கிக் கொள்ளாததாலேயே மத்திய அரசாங்கத்துடன் நின்றுவிடாது தமிழ்நாடு அரசாங்கத்துடனும் உறவுகளை ஏற்படுத்த இலங்கை முயல்வதாகத் தெரிவிக்கின்றது. (ஸ்ரீ-2)

# ஜனாதிபதிக்கும் பேராசிரியர்களுக்கும் இடையில் விரைவில் பேச்சுவார்த்தை

சம்பள முரண்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பல்கலைக்கழக பேராசிரியர்களுடன் விரைவில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்கள் சிலர் தாம் வகித்த நிர்வாக பதவிகளிலிருந்து அண்மையில் இராஜினாமா செய்து கொண்டதுடன் தங்களுடைய இராஜினாமா கடிதங்களை உபவேந்தர்களிடம் கையளித்துள்ள நிலையில் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி பேராசிரியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பேராசிரியர்கள் முகம்கொடுக்கின்ற சம்பள முரண்பாடுகளுக்கு தீர்வு காணுமாறு கோரி களனி, கொழும்பு, ரஜரட்ட உள்ளிட்ட பல்கலைக்கழகங்களில் கலை, முகாமைத்துவ பீடங்கள் உள்ளிட்ட பீடங்களுக்கு தலைமைப்பதவி வகித்தவர்களில் சிலரே இவ்வாறு இராஜினாமா கடிதங்களை அண்மையில் கையளித்துள்ளனர்.

பேராசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதாயின் தனிப்பட்ட ரீதியில் பேச்சுவார்த்தை நடத்தாமல் தாம் நியமித்துள்ள குழுவுடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என பல்கலைக்கழக பேராசிரியர் சங்கம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஸ்ரீ-2)

# பூநகரி வாடியடி நகர்ப்பகுதியில் சமூக பராமரிப்பு மையம் நிர்மாணம்

(பூநகரி)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சமூக சேவைத் திணைக்களத்தால் யுனிசெப் நிறுவன நிதியீட்டத்துடன் 15 இலட்ச ரூபா செலவில் சமூக பராமரிப்பு மைய கட்டட வேலைகள் பூநகரி வாடியடி நகர்ப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதியோரும் மாற்றுவலுவுள்ளோரும் கட்டடத்தினுள் இலகுவாக வந்து தமது சேவையை பெறக் கூடிய வகையில் நவீன செயற்பாட்டுடன் இக் கட்டட வேலைகள் நடைபெற்று வருவதாக இவ் வேலைக்கு பொறுப்பான அலுவலர் தெரிவித்தார்.

(ஸ்ரீ-84)

# நிர்மாணிக்கப்பட்டு 3 மாதமாகியும் திறக்கப்படாதுள்ள எரிபொருள் நிலையம்

(பருத்தித்துறை)

பெற்றோலிய கூட்டுத்தாபன தலைவரின் அனுமதி கிடைக்காததினால் 3 மாதங்களாகியும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட எரிபொருள் நிலையமொன்று இன்னமும் திறந்து வைக்கப்படவில்லை.

உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் பருத்தித்துறை யாழ். வீதி புறாப்பொறுக்கியில் நிர்மாணிக்கப்பட்ட சகல வேலைகளும் பூர்த்தி அடைந்த நிலையில் காணப்படும் இந்த எரிபொருள் நிலையமே பெற்றோலிய கூட்டுத்தாபன தலைவர் அனுமதி வழங்காமையால் திறக்கப்படாதுள்ளது.

(ஸ்ரீ-10)

# மெக்ஸிக்கோ எல்லையில் 500சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்கள் கைது

மெஸ்சிக்கோ -அமெரிக்க எல்லைப் பகுதியில் சுமார் 500 சட்ட விரோத புகலிடக் கோரிக்கையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு பாரிய கொள்கலன்களில் இந்த சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்கள் பயணம் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா- மெக்ஸிக்கோ எல்லைப் பகுதியில் எக்ஸ் கதிர் சோதனை நடத்தப்பட்டபோது சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்கள் கொள்கலன்களில் மறைந்திருகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இலத்தின் அமெரிக்கா மற்றும் ஆசியா ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களே இவ்வாறு சட்டவிரோதமான முறையில் அமெரிக்காவுக்கு பிரவேசிக்க முயற்சித்துள்ளனர்.

சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களில் 400 இற்கு மேற்பட்டவர்கள் குவந்தனாமாவை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பான், எல்சர்வடோர், இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் இந்த கொள்கலனில் மறைந்திருந்ததாக குறிப்பிடப்படுகிறது.கொள்கலன்களில் மிக நீண்ட நேரம் சிரமங்களுக்கு மத்தியில் இவர்கள் பயணம் செய்துள்ளனர்.

போதியளவு காற்றோட்டமோ நீரோ இன்றி இந்த சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்கள் பாதிக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மெக்ஸிக்கோவைப் பயன்படுத்தி வருடாந்தம் அரை மில்லியன் மக்கள் சட்டவிரோதமான முறையில் அமெரிக்காவுக்குள் பிரவேசிக்க முயற்சித்திருப்பதாக புள்ளிவிபர தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

(ஸ்ரீ-2)

# கிழக்கு மாகாண முதலமைச்சரின் வீட்டில் இராணுவம் சோதனை

(கொழும்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் இல்லத்தில் இராணுவத்தினர் நேற்று பிற்பகல் தேடுதல் நடவடிக்கையொன்றை மேற்கொண்டுள்ளனர்.

மட்டக்களப்பிலுள்ள அவரின் வீட்டில் மேற்கொள்ளப்பட்ட இத் தேடுதல் நடவடிக்கையை கண்டித்துள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், சாதாரண சட்டத்தின் கீழ் இத்தேடுதலில் பொலிஸாரே ஈடுபட்டிருக்க வேண்டும் எனக் கூறியுள்ளது.

தேடுதல் நடத்தப்பட்டவேளையில் முதலமைச்சர் சந்திரகாந்தன் அவ் வீட்டில் இருக்கவில்லையெனவும் இத்தேடுதலுக்கான காரணம் தெரியவில்லை என்றும் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

மனிதனுள் இருக்கும் தெய்வத்தை உணர்ந்து வாழ்வதுதான் நமது இலட்சியம்.

–ஜெயகாந்தன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web; www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சீனாவின் இந்திய எதிர்ப்பு நடவடிக்கைக்கு இடமளிக்கப்படாது

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

சீனாவின் இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு இடமளிக்கப்படமாட்டாது என இலங்கை அரசாங்கம் வாக்குறுதியளித்துள்ளது.

எந்தவொரு நாடும் இலங்கையைக் களமாகக் கொண்டு மற்றுமொரு நாட்டுக்கு எதிராக செயற்படுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சீனாவும் இந்தியாவும் நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் இலங்கையின் நெருங்கிய நட்பு நாடுகள் எனவும் இரண்டு நாடுகளுமே மிக முக்கியமான அபிவிருத்திப் பணிகளில் பங்களிப்புச் செய்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த உதவிகளை பிழையாக அர்த்தப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவிற்கான 3 நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு நாடுதிரும்புவதற்கு முன்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட



போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ–2)

## அதோ சிங்கள மக்களின் கைவண்ணச் சிறப்புப்பாரீர்

வெசாக் பண்டிகையை முன்னிட்டு சோடனைகள், வெளிச்சக் கூடுகள், கலைத்துவப்படைப்புகள் என நாடு அலங்காரம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பொலிஸ் நிலையங்கள், இராணுவமுகாம்கள்தோறும் வெசாக்பண்டிகைக்கான கோலங்கள் காட்சிதருகின்ற போதிலும் யாழ்ப்பாணத்தில் பொது நூலக வளாக வீதியின் இருமருங்கிலும் அமைக்கப்பட்டுள்ள வெசாக் கலைப்படைப்புகள் பார்ப்போர் மனதை ஈர்க்கவல்லன.

பனை, தென்னை ஆகியவற்றின் ஓலை, பன்னாடை, மட்டை, பாளை என்பன கொண்டு படைக்கப்பட்டுள்ள வெசாக் கலைப்படைப்புகள் சிங்கள மக்களின் கலைத்திறத்திற்கும் வடிவமைத்தல் நுட்பத்திற்கும் நல்லதோர் எடுத்துக்காட்டு. எதிலும் ஒரு அழகை, கலைத்துவத்தை, வடிவத்தை உருவாக்குவதில் சிங்கள மக்களுக்கு நிகர் அவர்களே என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடம் இல்லை.

தனித்து வெசாக் கலைப்படைப்புகள் மட்டும் அன்றி கட்டுமானங்கள் மற்றும் வீட்டு வடிவமைப்புகள் போன்றவற்றிலும் அவர்களிடம் இருந்து நிறையவேநாம் கற்க வேண்டியுள்ளன.

யாழ்ப்பாணத்திலும் கட்டிட அமைப்பு, வீட்டு நிர்மாணம் என்பன நடக்கின்றன. ஆனால் நம்மவர்கள் தமது வேலையில் நுட்பத்தை, சித்திரத்தை, வடிவத்தை ஒருபோதும் கருத்தில்கொள்வதில்லை.

அவர்களின் வேலையை இலகு மொழியில் கூறுவதாயின் 'குப்பை வேலை' என்று குறிப்பிடலாம். அந்தளவிற்கு வேலையில் பற்றோ விசுவாசமோ ரசனையோ கிடையாது.

இதன் காரணமாக நம்பவர்கள் சிங்கள இனத்தைச் சேர்ந்த கட்டிடத் தொழிலாளர்களை இங்கு வரவழைத்து அவர்களைக் கட்டுமானப் பணியில் ஈடுபடுத்துகின்றனர்.

கட்டிடப் பணியாளர்கள் கட்டுமானம், மாபிள் பதித்தல் மற்றும் சிற்பவேலைகளில் பயிற்சியும் அதிகூடிய கவனமும் எடுக்கத்தவறின் இன்னமும் இரண்டு வருடங்களில் யாழ்ப்பாணம் முழுவதிலும் சிங்கள கட்டிடத் தொழிலாளர்களாலேயே கட்டுமானப்பணிகள் இடம்பெறும் என்பதில் சந்தேகம் இல்லை.

இனத்துவ ரீதியில் அரசியல், சமூக பொருளாதார பாகுபாடுகள் இருக்கின்ற போதிலும்,

திறமைக்கும் வடிவமைப்பிற்கும் நுட்பத்திற்கும் முன்னுரிமை உண்டு என்னும் உண்மையை எவரும் மறந்துவிடல் ஆகாது.

ஆக சிங்களமக்களின் கலைத்துவப்படைப்புகளுக்கு நிகராக எங்களை நாங்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான் எமது உரிமைபற்றிய ஆர்வம் நம்மிடம் ஏற்படும்.

இல்லையேல் அவர்களின் படைப்புகளை இரசித்துவிட்டு எங்கள்மீது நாங்களே அவநம்பிக்கை கொள்ளும் அவலம் உருவாகும்.

அதேநேரம் சிங்கள மக்களிடம் ஒரு அன்புக் கோரிக்கை. உங்கள் கைவண்ணம் எத்துணை அழகாக இருக்கிறதோ அதுபோல தமிழ்மக்கள் மீதான உங்கள் எண்ணத்தையும் சிந்தனையையும் அழகு படுத்திக்கொள்ளுங்கள்.

அதற்கு கௌதம புத்தபிரானின் போதனைகளை பின்பற்றுவது போதுமானதாகும்.

## கிளிநொச்சியில் சிறுபோக நெற்செய்கை ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டுக்கான சிறுபோக நெற்செய்கை ஆரம்பமாகியுள்ளது.

கடந்த வாரம் இரணைமடுக் குளத்திலிருந்து நீர் திறந்துவிடப்பட்டதையடுத்து சிறுபோக நெற்செய்கை ஆரம்பமாகியுள்ளது.

இரணைமடுக்குளத்தின் மூலம் 10 ஆயிரத்து 800 ஏக்கரும் புதுமுறிப்புக் குளத்தின் மூலம் 486 ஏக்கரும் பூநகரி சிறு நீர்ப்பாசனச் செய்கைமூலம் 400 ஏக்கரும் வன்னேரிக்குளத்தின் மூலம் 130 ஏக்கரும் கரியாலை நாகபடுவான் குளத்தின் மூலம் 500 ஏக்கரும் பாலன் குளத்தின் மூலம் 100 ஏக்கரும் இராமநாதபுரம் புழுதியாற்றின் மூலம் 62 ஏக்கரும் செய்கை பண்ணப்படவுள்ளது.

கல்மடு, பிரமந்தனாறு, அக்கராயன் ஆகிய குளங்களின் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இதனால் அக்குளங்களின் மூலமாக இந்த ஆண்டு சிறுபோக நெற்செய்கை பண்ணப்படவில்லை என கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் 54ஆயிரம் மெற்றிக்தொன் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. (ஶ்ரீ–2)

## மதவாச்சி பிரதான வீதியில் விபத்து; 13 பேர் காயம்

அநுராதபுரம் மதவாச்சி பிரதான வீதியில் பார ஊர்தி ஒன்று பாதையை விட்டு விலகி ஓடை ஒன்றில் குடை சாய்ந்ததில் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை நிகழ்ந்த இந்த அனர்த்தத்தில் காயமடைந்தவர்கள் அநுராதபுரம் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 5 பேர் பெண்கள் எனக் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாகப் பண்டிகையை முன்னிட்டு அநுராதபுரம் விவங்கசேதிய விகாரையில் சிறுவன் ஒருவனை பிக்குவாக்கும் நோக்கிலான சமய சடங்கில் கலந்து கொண்டு திரும்பிய குடும்பத்தினரே இந்த அனர்த்ததிற்கு முகம் கொடுத்துள்ளார். பார ஊர்தியில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறே இந்த விபத்துக்கான காரணமாக அமைந்ததென குறிப்பிடப்பட்டுள்ளது. (ஶ்ரீ)

## அன்பே எனது வடிவம்– பாபா



புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்தில் பாபா தனது அடியார்களை அழைத்து பேட்டி கண்டுகொண்டிருந்தார்.

இதன்போது ஓரிசாவினைப் பூர்வீகமாகக் கொண்ட ஜெகன்நாத் என்பவரும் கலந்து கொண்டிருந்தார். அவரை பாபா அழைத்து பேட்டி கண்டபோது, அவர் தனது குறைகளைக் கூறமுற்படாது பாபாவைக் கண்ட ஆனந்தத்தில் சொல்ல வந்ததை மறந்து கண்ணீர் மல்க சுவாமியை தொழுது நின்றார். அப்போது பாபா வெளியில் சென்று அவரை அமரும்படி கூறினார்.

அவரும் வெளியில் சென்று அமர்ந்து கவலை பொங்கிய முகத்துடன் சுவாமி மீண்டும் என்னை அழைப்பாரா? என அருகில் இருந்தவரை விசாரித்தார்.

அப்போது சிலவேளை அழைக்கலாம் எனக்கூறி என்ன விடயமாக சுவாமியைக் காண வந்தீர்கள் என வினவினார். அதற்கு அவர் தனது மகளின் திருமணத்திற்கென ஆயத்தப்படுத்தி வைத்திருந்த கூரைச்சேலை, பணம், நகைகள், தாலி உட்பட இரண்டு கிழமைக்கு முன்பாக களவுபோய் விட்டது என்றார்.

பொலிஸிடம் போவதற்குப் பதிலாக இங்கு ஏன் வந்தீர்கள் என்று அருகில் இருந்தவர் கேட்டார். அதற்கு அவர் திருட்டினைப் பற்றி பொலிஸாரிடம் புகார் கொடுத்துவிட்டேன். அதன் விளைவு என்ன என்பது பற்றி எனக்குத் தெரியும்.

ஆனால்நான் பாபாவையே தொழுது வரும் ஒரு அடியான். நான் ஒரு ஏழை. என்னைச் சுற்றியிருப்பவர்கள் என்மீது பரிதாபத்தை மட்டுமே காட்டமுடியும். ஆனால் எவர் எனக்கு உதவுவார்? திடீரென்று எனக்கு பாபாவின் நினைவு வந்தது. அவரது உதவிக்காக இங்கு வந்தேன் என அழுதார்.

இவை அனைத்தையும் பாபாவிடம் பேட்டியறையில் கூறினாயா என்று மற்றவர் கேட்க, நான் பாபாவைப் பார்த்தவுடன் மனமுடைந்து அவர் பாதங்களில் வீழ்ந்து விட்டேன். என் குரலடைக்க என்னால் ஒரு வார்த்தை கூடப் பேசமுடியவில்லை. பாபா எனது முதுகில் தடவி கதவைத்திறந்து வெளியில் சென்று அமரும்படி கையசைத்தார். அதனால் இங்கு வந்து உட்கார்ந்தேன் என்றார்.

வெளியில் அமர்ந்திருந்தவர் அவரை அரை மனதுடன் அமரச் சொல்லி காத்திருக்கும்படி கேட்டுக் கொண்டார். இதற்கு முன் பாபா தங்கமோதிரம் ஒன்றினை அது தேவைப்படாத ஒரு செல்வச் செழிப்புள்ள தொழில் அதிபருக்குக் கொடுத்ததும் இந்த ஏழை மனிதனைப் புறந்தள்ளியதும் அவ ருக்கு பாபாவின் மீது சிறு கோபத்தை ஏற்படுத்தியது.

அச்சமயத்தில் பேட்டி அறையிலிருந்துவெளியே வந்த ஒருவர் "ஜெகன்நாத் யாரப்பா?" என்று கேட்டார்.

அப்போது ஜெகன்நாத் எழுந்து நின்று நான்தான் ஜெகன்நாத் எனப் பணிவோடு பதிலளிக்க பாபாவிடமிருந்து வந்த பிரசாதத்தினை எடுத்துக் கொள் என்றார்.

தட்டு நிறையப் பட்டுப் புடைவையும் வேட்டிகளும் காகித உறையொன்றும் தாலியும் அதில் காணப்பட்டது. அதனை ஜெகன்நாத் தான் அணிந்திருந்த சால்வையொன்றில் கட்டி எடுத்துக் கொண்டு பகவானை நோக்கி வணங்கி விட்டுச் சென்று விட்டார்.

இவை அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த வட இந்தியர் ஒருவர் பரிசுகளைக் கொண்டுவந்த நபரைப்


**யாதவன்**

பார்த்துக் கேட்டார். நீங்கள் பாபாவின் செயலாளரா? அம்மதிப்பிற்குரிய மனிதர் நிதானமாக நான் பாபாவின் சேவகன் என்றார்.

பின்னர் நாங்கள் அறிந்து கொண்டோம் அவர் திரு.கஸ்தூரி என்று. அவர் கல்லூரிப் பேராசிரியராகப் பணி புரிந்து முடிவாக பகவானின் ஸனாதன சாரதியின் ஆசிரியராகப் பணிபுரிபவர் என்று அறிந்து கொண்டோம்.

**ஜெய் சாய்ராம்**

# டொக்ஸ் பைல்களைப் படிக்க...



இந்த தருணத்தில் நமக்கு இலவசமாகக் கிடைப்பது Docx Viewer. இதன் மூலம் நாம் Docx போர்மட்டில் உள்ள பைல்களை நம் கணனியில் வைத்தே திறந்து படிக்கலாம். இதற்கு நம் கணனியில் வேர்ட் அல்லது வேர்ட் போன்ற புரோகிராமும் தேவையில்லை. இந்த புரோகிராமில் திறந்து படித்த பின்னர், அதனைத் கொப்பி செய்து அப்படியே நாம் பயன்படுத்தக் கூடிய டெக்ஸ்ட் புரோகிராமில் நாம் பயன்படுத்தும் போர்மட்டில் சேவ் செய்து வைத்துக் கொள்ளலாம்.

கணனியில் டொக்ஸ் பைல்களை உருவாக்க, மைக்ரோசொப்ட் நிறுவனம் வழங்கும் வேர்ட் புரோகிராம் பல ஆண்டுகளாக அனைவராலும் பயன்படுத்தப்படும் ஓர் அப்ளிகேஷனாக அமைந்து பெயரெடுத்துள்ளது. அறிமுகமான ஆண்டு முதல் தொடர்ந்து பல மாற்றங்களுக்கு உள்ளாகி வருகிறது.

அண்மையில் வேர்ட் 2010 ஒபீஸ் தொகுப்புடன் வந்துள்ள வேர்ட் புரோசசர் புரோகிராமில், வழக்கமான வேர்ட் பைல்கள், மாறா நிலையில் Docx என்ற வடிவில் அமைக்கப்படுகின்றன. இதனைப் பழைய வேர்ட் 2003 மற்றும் அதற்கு முந்தைய புரோகிராம்களில் திறந்து படிக்க இயலாது. எனவே, இந்த தொகுப்பினைத் தங்கள் கணனிகளில் இன்ஸ்டோல் செய்யாதவர்கள் இத்தகைய டொகுமெண்ட்களைப் படிக்க முடியாமல் சிரமப்பட்டு வருகின்றனர்.

இவர்களுக்கு உதவும் வகையில் பல இணைய தளங்கள் இலவசமாக இந்த பைல்களை Docx போர்மட்டில் மாற்றித் தரும் பணியை மேற்கொண்டு வருகின்றன.

Docx Viewer ஒருசிறிய எங்கும் எடுத்துச் செல்லக் கூடிய புரோகிராம். இதனைக் கணனியில் இன்ஸ்டோல் செய்திடத் தேவையில்லை. இந்த புரோகிராமை டவுண்லோட் செய்து, ஸிப் பைலை விரித்து வைத்து இயக்கினால் போதும். உடனே நமக்கு Docx போர்மட்டில் உள்ள பைலைத் திறப்பதற்கான மெனு கிடைக்கிறது. இதே புரோகிராமில் போர்மட்டில் சேவ் செய்திட முடியாது.

அதனைப் படிக்கலாம். திருத்தலாம் மற்றும் கொப்பி செய்து கிளிப் போர்ட்டுக்குக் கொண்டு போகலாம். பின்னர் கிளிப் போர்ட்டில் இருப்பதை, டெக்ஸ்ட் புரோசசருக்குக் கொண்டு செல்லலாம். இவ்வளவு எளிதாக நம் தேவையை நிறைவேற்றும் இந்த புரோகிராமினை டவுண்லோட் செய்திட http://download.cnet.com/DockViwer/300018483_475179715.html?tag=Mncol;2 என்ற முகவரிக்குச் செல்லவும்.


# உங்களுக்கு தெரியுமா?

- இன்டர்நெட்டில் அதிகம் பயன்படுத்தப்படும் மொழியாக ஆங்கிலம் உள்ளது. அதற்கு அடுத்தபடியாக ஜேர்மன், ஜப்பானீஸ், பிரெஞ்ச், ஸ்பானிஷ், ஸ்வேதிஷ், இத்தாலியன், போர்த்துகீசியம், டொச், நோர்வேஜியன், பின்னிஷ், செக், ரஷ்யன் மற்றும் மலாய் ஆகியவை வருகின்றன.
- ஒரு சிடியில் எழுதப்படும் டேட்டாவின் அளவு பொதுவாக நிமிடங்களில் தான் கூறப்படுகிறது. 74 நிமிடங்கள் என்பது ஏறத்தாழ 650 மெகா பைட்ஸ். 63 நிமிடம் என்பது 550 மெகா பைட்ஸ்.

# கணனி இயங்கிய நேரம்?

சிலர் கணனியை எந்நேரமும் இயக்க நிலையிலேயே வைத்திருப்பார்கள். சற்று நேரம் தாங்கள் ஓய்வெடுக்க விரும்பினால், அதனை ஷட் டவுண் செய்திடாமல் ஹைபர்னேட் செய்து பின்னர் மீண்டும் பணி செய்திட விரும்புகையில் இயக்க நிலைக்குக் கொண்டு வருவார்கள்.

பல இடங்களில் ஒரு கணனியை ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் பயன்படுத்துவார்கள். இப்படிப்பட்ட சூழ்நிழலைகளில் கணனி ஒன்று அதனை பூட் செய்த பின்னர் எவ்வளவு நேரம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று அறிய ஆவலாய் இருக்கலாம். இதற்கான வழியினை விண்டோஸ் சிஸ்டம் கொண்டுள்ளது.



விஸ்டா மற்றும் விண்டோஸ் 7 இயக்கத்தில், இதனைக் காண்பதற்கான வழி முறைகள்:

டாஸ்க்பாரில் ரைட் கிளிக் செய்திடவும். கிடைக்கும் மெனுவில் Task Manager என்பதைக் தேர்ந்தேடுக்கவும் அல்லது (Ctrl+Shift+Esc என்ற கீகளை அழுத்தவும். இப்போது டாஸ்க் மனேஜர் விண்டோ கிடைக்கும். இதில் தரப்பட்டுள்ள டேப்புக்களில் Performance என்ற டேப்பினைத் தேர்ந்தெடுக் கவும். இங்கு பிரிவில், உங்கள் கணனி பூட் செய்த பின்னர் எவ்வளவு நேரம் இயங்கியுள்ளது என்று காட்டப்படும்.

விண்டோஸ் எக்ஸ்பியில் (புரபஷனல் எடிஷனில் மட்டும்) ஸ்டார்ட், ரன் விண்டோ (Start +Run) செல்லவும் அதில் cmd) என டைப் செய்திடவும். பின்னர் ஓகே கிளிக் செய்திடவும். இப்போது டாஸ் இயக்கக் கட்டளைப் புள்ளி (Command Prompt) கிடைக்கும். இங்கு systeminfo என டைப் செய்து என்டர் தட்டவும். கணனி சில நிமிடங்கள் அல்லது விநாடிகள் எடுத்துக் கொண்டு, நேரத்தைக் கணித்துச் சொல்லும். இது நாள், மணி, நிமிடம் மற்றும் விநாடி என்ற அளவுகளில் காட்டப்படும்.




# அறிவியல் தகவல்களுக்கு சிறந்த தேடல் தளம்!

தேடலுக்கான தளம் என்றால், நம் நினைவில் முதலில் நிற்பது கூகுள் தேடு தளம் மட்டுமே, ஆனால் அறிவியல் தகவல்கள் தேடுவதற்கு மட்டும் என ஓர் தளம் கூகுள் தேடல் தளத்தைத் காட்டிலும் முன்னணி இடம்பெற்று இயங்குகிறது.

இதன் பெயர் சைரஸ் (Scirus) இயங்கும் முகவரி http:www.scirus.com கூகுள் தளத்திற்கும் மேலாக இதனை நீங்கள் ஏன் பயன்படுத்தவேண்டும் என்பதற்கான காரணங்களை இந்தத் தளம் கொண்டுள்ள http:www.scirus.com/srsapp/aboutus என்ற இணையப் பக்கத்தில் காணவும்.

இந்தத் தேடுதல்தளம் கொண்டுள்ள முகப்பு பக்கத்தில் ஏறத்தாழ 41 கோடி தளங்கள் உள்ளன. தேடும்போது, முக்கிய சொல், தலைப்பு அல்லது அறிவியல் கலைச் சொல் என ஏதேனும் ஒன்றைத் தரலாம். அந்த தலைப்பு அல்லது சொல் குறித்த தளங்கள் மட்டுமின்றி பல முக்கிய கட்டுரைகளையும் இந்த தளம் சுட்டிக்காட்டுகிறது.



இதனுடைய ஒரு சிறப்பம்சம் என்னவெனில், அறிவியல் அல்லாத மற்ற தளங்களை இந்த தேடல் தளமே ஒதுக்கி விடுகிறது. எனவே தொடர்பு இல்லாத மற்ற தளங்களின் லிங்க் மீது கிளிக் செய்து, அவற்றைத் தேவையின்றி இறக்கி நேரத்தை வீணடிக் கும் வேலை இங்கு எழாது.

இந்த தளம் சுட்டிக் காட்டும் தளங்கள் அனைத்தும் அறிவியல் சார்ந்த, தொழில் நுட்பம் அல்லது மருத்துவம் சார்ந்த தகவல்கள் உள்ள தளங்களாக இருக்கும்.

அண்மைக்காலத்தில் அந்த அறிவியல் பிரிவில் வெளியான அறிக்கைகள், வல்லுநர்களின் கட்டுரைகள், காப்புரிமை பெற்ற தொழில் நுட்பக் கண்டுபிடிப்புக்கள், ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கி வரும் ஆய்வு இதழ்கள் ஆகியவற்றைக் காட்டும் இணைய தளங்களுக்கான தொடர்புகளாக இருக்கும்.

ஆய்வு மேற்கொள்பவர்கள் மற்றும் விஞ்ஞானிகளுக்கான தனிப்பட்ட தகவல்களைக் காட்டும் தளங்களாக இருக்கும்.

தொடர்ந்து பல ஆண்டுகளாக, அறிவியல் தேடல்களுக்கான இணையதளத்திற்கான விருதை இந்த தளம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த தளத்தின் மூலம் குறிப்பிட்ட பொருள் குறித்த தேடல் மட்டுமின்றி, கட்டுரை எழுதியோர், கட்டுரைத் தலைப்பு, அதனை வெளியிட்ட ஆய்வு இதழ் ஆகியவற்றின் அடிப்படையிலும் தேடலாம். நாட்கள் அடிப்படையிலும் தேடலை மேற் கொள்ளலாம்.

தளங்கள் மட்டுமின்றி பல்வேறு ஆய்வு இதழ்களில் வெளியான கோடிக்கணக்கான ஆய்வுக் கட்டுரைகள் தாங்கியுள்ள தளங்களையும் இந்த தேடல் தளம் நமக்குக் காட்டுகிறது. அறிவியல் அடிப்படையில் இயங்கும் இன்றைய உலகில் நாம் அனைவரும் கட்டாயம் பயன்படுத்த வேண்டிய தளம் இது.

# அன்றும் இன்றும்

அப்ளிகேஷன் என்பது அன்று வேலை தேடுவதற்கான விண்ணப்பம். இன்று குறிப்பிட்ட பணியை மேற்கொள்ள இயங்கும் புரோகிராம்.

விண்டோஸ் என்பது நாம் சுத்தம் செய்ய அலுத்துக் கொள்ளும் வீட்டின் ஒரு பகுதி. இன்று உலகை இணைக்கும் ஒரு பாலம். கேர்சர் என்பது புனிதமல்லாத தெய்வ நிந்தனை கொண்ட ஒரு சமாச்சாரம். இன்று கணனியில் நம் கட்டளைக்குக் கண்சிமிட்டும் ஒருகோல் போஸ்ட் .

கீ போர்ட் என்பது அன்று ஒரு பியானோ. இன்று நம் விரல்களுடன் பாட்டுப் பாடும் ஒரு சாதனம்.

மெமரி என்பது வயதாகும் போது நம்மிடம் தேயும் ஒரு ஆற்றல். இன்று கணனியின் இயக்கங்களுக்கு ஒரு தளம்.

சி.டி அன்று ஒரு போங்க் என்கவுண்ட். இன்று பயன்படுத்தப்பட்ட பிறகும் வீணாகிப் போனால் ஆட்டோக்களிலும் சைக்கிள்களிலும் அழகுக்கு மாட்டப்படும் ஒரு தட்டு.

பொது இடத்தில் அன்ஸிப் செய்தால் அன்று உதைப்பார்கள். இன்று அன்ஸிப் செய்வதனை எல்லோரும் பார்க்கலாம். அன்று குப்பைகளைத் தான் கம்ப்ரஸ் செய்வார்கள். இன்று எளிதாகத் தகவல்களைத் தூக்கிச் செல்ல கம்ப்ரஸ் செய்கிறோம்.

எலி வாழும் இடம் தான் அன்று மவுஸ் போட். இன்று நம் கரங்களில் தவழும் கணனிக் குழந்தைக்கான படுக்கை.



கத்திரிக்கோல் வைத்துத் தான் அன்று கட் செய்தோம். இன்று இரண்டு கிளிக் செய்தே வெட்டுகிறோம். பல் தேய்க்கத்தான் அன்று பேஸ்ட். இன்று கையில் தொடாமலேயே நிறைய கணனியில் ஒட்டுகிறோம்.

எட்டுக்கால் பூச்சியின் மாளிகை தான் அன்று வெப். இன்று உலகைச் சுற்றி பின்னப்பட்ட டிஜிட்டல் வலையே வெப். காய்ச்சல் வந்தால் காரணம் வைரஸ். இன்று அடுத்தவனைக் கெடுக்கும் புரோகிராமே வைரஸ்.

# DLF IPL ஐ.பி.எல் கொண்டாட்டம்

ஏப்பிரல் 8 முதல் மே 28 வரை

# துளித்துளியாய்...

## கங்குலி – ஷாருக் நடனம்

ஷாருக்கான் மும்பையில் உள்ள தனது வீட்டில் கொல்கத்தா, புனே, ஐதராபாத் அணியில் இடம்பெற்றுள்ள கிரிக்கெட் வீரர்களுக்கு விருந்து கொடுத்தார்.

இதில் சினிமா உலகத்தைச் சேர்ந்த அர்ஜுன் ராம்போல், பிரியங்கா சொப்ரா, ஷாகித்கபூர், சூசன்னா, ஹிருத்திக் ஆகியோர் பங்கேற்றனர். கங்குலியும் கலந்து கொண்டார். விருந்தில் நடந்த நடனத்தில் கங்குலி யுடன் இணைந்து ஷாருக் ஆடினார். அவரைவிட்டு ஷாருக் பிரியவே இல்லை.

## இங்கி.தொடருக்கு வருகிறார் சேவாக்

தோள்பட்டையில் ஏற்பட்ட காயத்தால் ஐ.பி.எல் தொடரில் இருந்து பாதியில் விலகிய சேவாக் கடந்த வாரம் இலண்டன் சென்றார். அங்கு அவருக்கு அறுவை சிகிச்சை நடந்தது. இதனால் ஜுன் 4ஆம் திகதி ஆரம் பமாகவிருக்கும் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான தொடரில் அவர் தேர்வு செய்யப்படவில்லை.

இதுபற்றி சேவாக் கூறும்போது,

அறுவை சிகிச்சைக்குப்பின் காயம் குணமடைந்து வருகிறது.6 வார சிகிச்சைக்குப்பின் லண்டனில் இருந்து திரும்புவேன்.முழுவதும் குண மடைய 6முதல் 8வாரங்கள் ஆகும் என டாக்டர்கள் தெரிவித்துள் ளனர். எனவே ஜுலையில் ஆரம்பமாகும் இங்கிலாந்து தொடருக்குள் நான் தயாராகி விடுவேன் என்றார்.

## ஹைதரை விசாரிக்க 3பேர் குழு

தென்னாபிரிக்காவுக்கு எதிராக கடந்த நவம்பர் மாதம் டுபாயில் நடந்த ஒருநாள் போட்டியின் போது சூதாட்ட கும்பல் மிரட்டலுக்கு பயந்து பாகிஸ்தான் விக்கெட் காப்பாளர் ஹைதர் இலண்டன் ஓடிவிட்டார். தற்போது நாடு திரும்பியிருக்கும் அவர் ஏன் ஓடினார் என்பது குறித்து விசாரிக்க 3பேர் குழுவை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நியமித்துள்ளது.

## ஐ.சி.சி. பதவிக்கு ரோனி கிரேக் ஆசை

ஐ.சி.சி. பதவிகளில் தற்போது இந்தியா ஆதிக்கம் செலுத்தி வருகிறது. ஐ.சி.சி. தலைவராக சரத்பவார் உள்ளார். இனிவரும் காலங்களில் ஐ.சி.சியின் உயர் பதவியை அடைய இங்கிலாந்து அணியின் முன்னணி அணித்தலைவரும் பிரபல கிரிக்கெட் வர்ணணையாளருமான ரோனி கிரேக் முடிபு செய்துள்ளதாக தவல்கள் தெரிவிக்கின்றன.

## சங்காவுக்கு இலண்டனில் கௌரவம்

இலண்டனில் உள்ள லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறும் கூட்டத்தில் உரையாற்றுவதற்கு இலங்கை முன்னணி வீரர் சங்கக் காரவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஜுலை 4ஆம் திகதி அவர் உரையாற்றுவார்.

கிரிக்கெட் விளையாடி வரும் ஒரு வீரருக்கு இத்தகைய கௌரவம் லோர்ட்சில் அளிக்கப்படுவது இதுவே முதன்முறையாகும்.11 ஆண்டு கால லோர்ட்ஸ் வரலாற்றில் மிக இளம் வயதில் கிரிக்கெட் பற்றி பேச சங்கக்காரவுக்கு (33) லோர்ட்ஸ் நிர்வாகம் அனுமதி அளித்துள்ளது.

## தெ.ஆ.அணித்தலைவர் களத்தில் 4பேர்

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணித்தலைவர் பதவியில் இருந்து சிமித் விலகிவிட்டார்.அவருக்கு பதிலாக ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிக்கு புதிய அணித்தலைவர் தேர்வு செய்யும் பணி நடக்கிறது.

இந்த போட்டியில் டுமினி, போத்தா, அம்லா,ஏ.பி.டிவிலியர்ஸ் ஆகியோர் உள்ளனர்.

## ஐ.பி.எல்-2011

| சிக்ஸ்சர் | பவுண்டரி |
|---|---|
| 544 | 1675 |

# சகா சாதித்தார், சென்னை வெற்றி

# விடைபெற்றது கொச்சி தஸ்கர்ஸ் அணி



(சென்னை)

சகாவின் அதிரடி துடுப்பாட்டத் தின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 11ஓட்டங்கள் வித்தியாசத்தில் கொச்சி தஸ்கர்ஸ் அணியை வீழ்த் தியது.



இதன் மூலம் தனது இறுதி லீக் போட்டியில் விளையாடிய கொச்சி தஸ்கர்ஸ் அணி தொடரி லிருந்து விடைபெற்றது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பின் 10அணிகள் மோதும் 4ஆவது இருபது-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் சென்னையில் நேற்று நடைபெற்ற 64ஆவது போட்டியில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும், பார்த்திப் பட் டேல் (பதில்) தலைமையிலான கொச்சி தஸ்கர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச்சுழற் சியில் வெற்றிபெற்று முதலில் துடுப் பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சகாவின் அதிரடியில் 20ஓவர்களில் 5விக்கெட்டுக்களை யிழந்து 152ஓட்டங்களை எடுத்தது.

இதில் விரிட்டிமன் சகா ஆட்ட மிழக்காமல் 33 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 3 சிக்ஸ்சர்கள் உட்பட) 46ஓட்டங் களையும், மைக்கல் ஹசி 37பந்துகளில் (2பவுண்டரிகள் உட்பட) 32 ஓட்டங் களையும், சுரேஷ் ரெய்னா 19, முரளிவிஜய் 16 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஜடேஜா 2விக் கெட்டுக்களையும், ஆர்.பி.சிங், சிறிசாந்த், ஹோட்ஜ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20ஓவர்களில் 153 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தா டிய கொச்சி தஸ்கர்ஸ் அணி இறு திப்பந்துவரை போராடி 5விக்கெட் டுக்களையிழந்து 141 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 11ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் ஹோட்ஜ் ஆட்டமிழக் காமல் 42பந்துகளில் (3பவுண்டரி கள், 2சிக்ஸ்சர்கள் உட்பட) 51ஓட்டங் களையும் பிரண்டன் மக்குலம் 33 ஓட்டங்களையும், ஞானேஸ்வர ராவ், ஜடேஜா தலா 19 ஓட்டங்க ளையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அஸ்வின், பொல் லிங்கர்,ஜகதி, பிரவோ தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் சென் னை சுப்பர் கிங்ஸ், தான் விளை யாடிய 13ஆவது போட்டியில் 9 ஆவது வெற்றியைப் பதிவு செய் தது.

அத்துடன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி பிளே ஓப் சுற்றில் ஏற்கனவே தகுதிபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் சகா ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

## இன்றைய ஆட்டம்



புனே வாரியர்ஸ்

எதிர்

கொல்கத்தா நைட்ரைடர்ஸ்

இரவு 8.00 மணி


மும்பை

## புள்ளிப் பட்டியல்

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| சென்னை | 13 | 9 | 4 | 0 | 0 | 18 | +0.544 |
| றோயல் சலஞ்ஜர்ஸ் | 13 | 8 | 4 | 0 | 1 | 17 | +0.283 |
| மும்பை இந்தியன்ஸ் | 12 | 8 | 4 | 0 | 0 | 16 | +0.245 |
| கொல்கத்தா | 12 | 7 | 5 | 0 | 0 | 14 | +0.403 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 13 | 7 | 6 | 0 | 0 | 14 | +0.271 |
| கொச்சி | 14 | 6 | 8 | 0 | 0 | 12 | -0.214 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 13 | 5 | 7 | 0 | 1 | 11 | -0.969 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 13 | 5 | 8 | 0 | 0 | 10 | -0.080 |
| புனே வாரியர்ஸ் | 12 | 4 | 8 | 0 | 0 | 8 | -0.033 |
| டில்லி | 13 | 4 | 9 | 0 | 0 | 8 | -0.448 |

# இனிமேலாவது சிந்திப்பீர்களா?

# கருணாநிதிக்கு பழ நெடுமாறன் கடிதம்



(சென்னை)

திமுக தலைவர் கருணாநிதிக்கு இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் பகிரங்கமாக கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பாக கருணாநிதிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில்,

மதிப்புக்குரிய தலைவர் கருணாநிதி அவர்களுக்கு, வணக்கம்.

எப்படி இருந்தவர்கள் இப்படி மாறிவிட்டார்களே என்ற தலைப்பில் மிகுந்த ஆதங்கத்துடன் எனது பழைய கடிதம் ஒன்றை எடுத்து மேற்கோள்காட்டி விடுத்திருந்த அறிக்கையைப் படித்துப் பார்த்தேன்.

தேர்தல் முடிவுகள் வெளிவரும் நாளில் அதைப்பற்றிக் கூட கவலைபடாமல், எனது கடிதம் குறித்து அறிக்கை வெளியிடும் அளவுக்கு உங்கள் மனநிலை இருந்திருக்கிறது என்பது புரிகிறது.


பொடா சிறையில் நான் இருந்த போது, நீங்கள் எழுதிய தொல்காப்பியப்பூங்கா நூலைக் கையெழுத்திட்டு எனக்கு அனுப்பி வைத்தீர்கள். நானும் அதைப் படித்துப் பார்த்துவிட்டுத் தங்களுக்கு ஒரு பாராட்டுக் கடிதம் அனுப்பினேன்.

ஆனால் தாங்கள் செய்த, செய்து வரும் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்கும் தங்களது இலக்கியத்தைப் பாராட்டுவதற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை நன்கு அறிந்திருந்தும் திசை திருப்புவதற்கு முயற்சி செய்திருக்கிறீர்கள். இப்போது மட்டுமல்ல, நீண்டகாலமாகவே இவ்வாறு செய்து வருகிறீர்கள்.

1985ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் துணையுடன் இலங்கைத் தமிழர் பகுதியில் இரகசிய சுற்றுப்பயணம் மேற்கொண்டு அங்கு சிங்கள இராணுவம் இழைத்துவரும் கொடுமைகளை ஆதாரபூர்வமாக அறிந்துவந்து வெளியிட்டபோது, நீங்கள் முரசொலி இதழில் என்னைப் பாராட்டி முழுப்பக்க அளவில் கட்டுரை எழுதினீர்கள். இப்போதும் அதை நன்றியோடு நினைவுகூருகின்றேன்.

காமராஜ் மக்கள் தொண்டுக்காக திருமணத்தைத் துறந்தவர். பெற்ற தாயைக்கூட தன்னுடன் வைத்துப் பேணாதவர். ஒன்பது ஆண்டுகள் ஆங்கிலேயரின் கொடுமையான சிறையில் வாடியபோதும் அது குறித்து ஒருபோதும் பேசாதவர். மறையும்போது தான் உடுத்திருந்த துணிகளைத் தவிர வேறு சொத்து இல்லாதவர்.

ஆனால், நீங்களோ மனைவி, துணைவி எனப் பல்கிப் பெருகிய குடும்பங்களுடன் வாழ்பவர். அது மட்டுமல்ல, ஏழைக் குடும்பமான உங்கள் குடும்பம் இன்று ஆசியாவின் மிகப் பெரிய பணக்காரக் குடும்பங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.



தனது தாய் உள்பட, தனது குடும்பத்தவர் எவரையும் அரசியலில் அனுமதிக்காதவர் காமராஜ். அதைப் போலவே தான் உருவாக்கிய திமுக கழகத்தில் அண்ணா தனது பிள்ளைகள் எவரையும் வாரிசாக அறிமுகப்படுத்தவில்லை.

13 ஆண்டுகள் நீங்கள் பதவி இல்லாத இருளில் தடுமாற நேர்ந்தது. ஆனாலும் நீங்கள் பாடம் கற்கவில்லை. இப்போது இளம் நடிகர்கள் விஜய், சூர்யா ஆகியோருக்குப் போட்டியாக உங்கள் பேரன் அருள்நிதியை கலையுலகில் இறக்கியிருக்கிறீர்கள். விஜய்யின் படங்களுக்கு பல முட்டுக்கட்டைகளைப் போட்டுத் தடுக்க நடைபெற்ற முயற்சி வெற்றி பெறவில்லை. விஜய்யின் பகையைத் தேடிக் கொண்டதுதான் மிச்சம். திரையுலகைக் கபளீகரம் செய்ய உங்கள் வாரிசுகள் செய்த முயற்சியின் விளைவாக ஒட்டுமொத்தத் திரையுலகமுமே உங்களுக்கு எதிராகத் திரும்பிவிட்டதே! என்றுள்ளது. (ச-5)

# வன்னி மனிதப் படுகொலைகளுக்கு இந்தியாவும் பொறுப்புக் கூறவேண்டும்

(மட்டக்களப்பு)

2009 மே 18-ல் வன்னியில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகளுக்கு இந்தியாவும் பொறுப்புக் கூறவேண்டும். இவ்வாறு நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் மனிதப் படுகொலைகளின் இரண்டாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வில் உரையாற்றுகையில் பாராளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகளின் இரண்டாம் ஆண்டு நினைவு நாள் நேற்று மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் உள்ள சக்தி இல்லத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான பொன் செல்வராசா, பா.அரியநேந்திரன், சீ.யோகேஸ்வரன் ஆகியோர் ஏற்பாடுசெய்து நடத்தினர்.

நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் அவர்கள் மேலுள்ளவாறு தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டு மே மாதம் வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள் என்பதை தற்போது ஐ.நாவும் ஒப்புக்கொண்டுள்ளது. இலங்கை அரசு, இந்தியா உட்பட இன்னும் பல நாடுகளின் உதவியுடன் பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதல்களை பொதுமக்கள் மீது மேற்கொண்டதால் பாரிய மனிதப் படுகொலை அங்கு இடம்பெற்றிருக்கின்றது.

எனவே இந்தப் பேரவலமான படுகொலைகளுக்கு இந்தியாவும் பொறுப்புக் கூறவேண்டிய கடப்பாடு உள்ளதால் தமிழ்நாடு முதல்வராக தெரிவாகியுள்ள செல்வி ஜெயலலிதா அவர்கள் ஈழத்தமிழர்களுக்கு விடிவு கிடைக்க மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் எனத் தெரிவித்தார். (ச-5)

## அரசுக்கு முழு...

தலைவர்களிடம் வழங்கிய உறுதிமொழிகளின்படி இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் அரசியல் தீர்வுகாண அரசு நடவடிக்கை எடுக்குமாயின் அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பூரண ஒத்துழைப்பு வழங்கத்தயார். இப்படி சம்பந்தன் தெரிவித்தார்.

அமைச்சர் பீரிஸ், இந்தியத் தலைவர்கள் சந்திப்பின் பின்னர் வெளியிட்ட கூட்டறிக்கையில் அவசரகால சட்டத்தை நீக்கவேண்டும் என்றும், மனிதவுரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணையை இலங்கை அரசை நடத்த வேண்டும் என்றும் இந்தியா வலியுறுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## தமிழக முதலமைச்சர்...

வழிமுறைகளில் போராடும் இன்றைய தருணத்தில் தங்களது வெற்றி ஈழத் தமிழ் மக்களுக்கு ஒரு புதிய நம்பிக்கையையும், உற்சாகத்தினையும் தந்திருக்கிறது.

இலங்கையில் சிங்கள இனவாதம் தமிழர்களை சமத்துவமாகவும், கௌரவமாகவும் வாழ்வதற்கான வாய்ப்பெதனையும் கடந்த காலங்களில் விட்டுவைத்ததில்லை. இனியும் விட்டுவைக்கப் போவதில்லை. தமிழர்களின் அடையாளத்தை அழித்து மெல்லமெல்ல அவர்களை சிங்கள இனத்துடன் கரையப் பண்ணி இனக் கபளீகரம் செய்யும் முயற்சியினை சிங்கள அரசு மேற்கொண்டு வருகிறது.

ஈழத் தாயகத்தில் உள்ள தமிழ் அரசியல் தலைவர்கள் பேச்சுவார்த்தைகளின் ஊடாக தமிழரின் பாதுகாப்பான, கௌரவமான வாழ்வுக்கான ஏற்பாடு ஒன்றை எட்டுவதற்கு எடுக்கும் முயற்சிகளை சந்தர்ப்பம் பார்த்து உரிய நேரத்தில் சிங்கள இனவாதம் தனது இரும்புச் சப்பாத்துக்களால் துவம்சம் செய்துவிடும். இந்தநிலை தமிழீழ தனியரசினை தவிர வேறு மார்க்கம் ஏதுமில்லை என்பதனை உலகிற்கு முரசறைந்து சொல்லும்.

இத்தகைய ஒரு போக்கில் வரலாறு முன்னேறும் தருணத்தில் தாங்கள் தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருப்பது தமக்கு ஒரு பாதுகாப்புக் கவசமான அமையும் என ஈழத் தமிழ்மக்கள் கருதுகிறார்கள். தாங்கள் முதல்வராக இருந்த போதுதான் ஈழத் தமிழ் மக்களின் கௌரவமான வாழ்வும், பாதுகாப்பும் உறுதிசெய்யப்பட்டது என்பது வரலாற்றில் நிலைபெறும் வகையில் தாங்கள் செயற்பட வேண்டும் என்பதே எமது விருப்பமாகும் என்றுள்ளது.

(ச-5)

## இரண்டு ஆண்டுகள்...

நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கை ஆதாரங்களுடன் பட்டியலிட்டுள்ளது.

ஆனால் இப்போரின்போது பொது மக்கள் எவரும் படைத்தரப்பால் கொல்லப்படவில்லை என அரசாங்கம் தொடர்ச்சியாகக் கூறிவருகிறது.

இப் போரில் உயிர் இழந்தவர்களை நினைவு கூருவதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதி அளிப்பதில்லை. அத்துடன் போரின்போது உயிரிழந்த பலருக்கு இதுவரை மரண அத்தாட்சிப் பத்திரங்களும் வழங்கப்படவில்லை.

எனவே வன்னிப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்களை உதாசீனம் செய்யாமல் அது குறித்த சர்வதேச விசாரணைகளை ஐக்கிய நாடுகள் சபை முன்னெடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையை இலங்கை அரசாங்கம் மிகச் சாதாரணமாக நிராகரித்துள்ளது. ஆனால் உண்மைகள் என்பதை ஒருபோதும் குழிதோண்டிப் புதைக்கமுடியாது. எனவே உண்மையின் பேரால், நீதியின் பேரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதிகிடைப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையும், சர்வதேச சமூகமும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (ச-5)

## த.ம.வி.பு. உயர்மட்டக் குழு...

ஏ.கைலேஸ்வரராஜா, மாகாணசபை உறுப்பினர் பூ.பிரசாந்தன், மட்டக்களப்பு மாநகரசபை பிரதி மேஜர் ஜோர்ச்பிள்ளை, பிரதேசசபைத் தவிசாளர்களான உதய ஜீவதாஸ், சிறிதரன், சுப்பிரமணியம் உள்ளிட்ட உயர்பீட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இங்கு மேலும் கருத்து வெளியிட்ட அசாத் மௌலானா,

கடந்த சில நாட்களாக நடைபெற்றுவரும் செயற்பாடுகள் குறித்து எமது கட்சி ஆழ்ந்த கவலையையும், கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கிறது. கிழக்கில் சட்ட ஒழுங்கை நிலை நாட்டுவதிலும், அமைதியைப் பேணுவதிலும் பலமுள்ள கட்சி என்றவகையில் எமக்குப் பொறுப்புண்டு. அசம்பாவிதங்கள் குறித்து எமது கட்சி உறுப்பினர்கள் மீது சந்தேகங்கள் இருந்தால் எமது கட்சியிடம் அறிவித்திருந்தால் நாங்கள் எமது உறுப்பினர்களை ஒப்படைத்திருப்போம். அதற்காக எந்தவித அறிவித்தலுமின்றி கைது செய்ய வேண்டிய அவசியமில்லை.

எந்தவித முன்னறிவித்தலுமின்றி முதலமைச்சரின் மட்டக்களப்பிலுள்ள வாசஸ்தலத்தைச் சோதனையிடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. இது எமது தலைவருக்கும் முதலமைச்சருக்கும் ஏற்படுத்தப்பட்ட அகௌரவமாகவே நாம் பார்க்கிறோம். எமது கட்சிக்கும் தலைவருக்கும் ஏற்படுத்தப்பட்ட அரசியல் களங்கத்திற்கு நீதி வேண்டும் என ஜனாதிபதியைக் கோரவிருக்கின்றோம்.

எமது கட்சி உறுப்பினர்கள் இச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டிருந்தால் அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் தயாராகவிருக்கிறோம். எமது கட்சியின் அரசியல் வளர்ச்சிகள் குறித்து பல்வேறு நெருக்குதல்களும் சதி முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவற்றினை முறியடித்துச் செயற்படவேண்டிய பொறுப்பு மக்கள் கட்சி என்ற வகையில் எமது தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சிக்கு உண்டு எனவும் தெரிவித்தார். (ச-5)

மீண்டும் யாழ்நகரில்,
D.C.M
163, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்
(வேம்படி மகளீர் கல்லூரிக்கு அருகாமையில்)
ரெத்திடியேக வகுப்பு
பொருளியல் S. வரதராஜன் B.A (Hons)
A/L 2013 தேர்ச்சி -1 பொருளியல் அறிமுகம்
தேர்ச்சி -2 சந்தைச் செயற்பாடு
ஆரம்பம்: 20.5.11 வெள்ளி 3.00
A/L 2012 தேர்ச்சி -5 தேசிய கணக்கீடு
(பாடத்திட்ட வகுப்பு)
மீட்டல் வினாவிடை
பயிற்சி வகுப்பு
ஆரம்ப அலகிலிருந்து
ஆரம்பம்: 20.5.11 வெள்ளி 4.00

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.